பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 13 வியாழக்கிழமை (29-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:275

# பிரச்சினையற்ற, ஆக்கபூர்வமான பேச்சுக்கு இருதரப்பும் பங்களிப்பு

## சனிக்கிழமை கைதிகள் பரிமாற்றம் செப். 6ஆம் திகதி தடைநீக்கம்!

கொழும்பு,ஓகஸ்ட்29

**தாய்லாந்தில் பேச்சுக்கள் பிரச்சினை எதுவுமின்றி ஆக்கபூர்வமாக நடைபெறுவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் அரசும் புலிகளும் கரிசனையோடு செய்துவருகின்றனர் என்று நோர்வே இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கைதிகள் பரிமாற்றம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புலித் தடைநீக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி அதாவது, அரசு முன்னர் உறுதியளித்தபடி பேச்சு ஆரம்பமாவதற்கு 10 நாள்களுக்கு முன்னர் நடைபெறும்.**

புலிகள் தம்மிடமுள்ள கைதிகள் (கடற்படையினர்) எட்டுப் பேரையும் விடுதலை செய்கிறார்கள்.

அரசு 23 பேரை விடுதலை செய்ய இருக்கிறது. விடுதலை செய்யப்பட இருப்பவர்கள் பல்வேறு சிறைச்சாலைகளில் இருந்து கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

இரு தரப்புக் கைதிகளும் வன்னியில் வைத்து விடுதலை செய்யப்படுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

புலித் தடை முதற்படியாக ஒரு மாதத்துக்கே நீக்கப்படுகிறது என்று அரச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளபோதிலும் அரசு உத்தியோகபூர்வமாக அப்படி அறிவிக்கவில்லை. நோர்வேக்குக் கூட அரசு அப்படியான தகவல் எதையும் கொடுக்கவில்லை என்று அறிவருகிறது.

குறிப்பிட்ட காலங்களுக்கு மட்டும் தடை நீக்கப்படுவதைப் புலிகள் ஏற்

(14ஆம் பக்கம் பார்க்க)

### கத்தோலிக்க ஆயர்களினால்

## சமாதானப் பிரார்த்தனை தினமாக செப்ரெம்பர் 6ஆம் திகதி அறிவிப்பு

கொழும்பு,ஓக.29

அடுத்தமாதம் 6ஆம் திகதி நோன்பிருந்து சமாதானத்திற்காக பிரார்த்திக்குமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு நீடித்த, நிலையான தீர்வு காண்பதற்காக சமாதானப் பேச்சுக் குறித்து பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அரசும் எதிர்க்கட்சிகளும் செயற்பட

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் குடும்பஸ்தர் கத்தியால் குத்திக் கொலை

யாழ்ப்பாணம்,ஓக.29

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி, பலாலி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான தெய்வேந்திரன் யசோதரன் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கொக்குவிலில் உள்ள மாணிக்கம் சிவகுமார் என்பவரின் வீட்டுக்குச் சென்றதாகவும்

மதுபோதையில் இருந்த இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நாடாளுமன்ற அறையில் இரகசியக் கூட்டம்! அனுமதித்தது யார்?

### அமைச்சர் அஸ்வர் பிரச்சினை; ஆராய்ந்து அறிவிப்பதாக சபாநாயகர் பதில்

கொழும்பு,ஓக.29

நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறையில் அவர் இல்லாதபோது இரகசியக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. ஜே.வி.பியினரும் அதில் கலந்துகொண்டனர். இதற்கு அனுமதியளித்தது யார்? ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

இதற்கான அனுமதியை நான் வழங்கவில்லை. அதுபற்றி எனக்கு அறிவிக்கப்படவுமில்லை. இது தொடர்பாகப் பரிசீலனைசெய்து உண்மை நிலை சபைக்கு அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் உறுதியளித்தார்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக்காலை 10 மணிக்கு கூடியபோது அமைச்சர் அஸ்வர் மிகவும் இரகசியமாக நடைபெற்ற அக்கூட்டம் தொடர்பாக அம்பலப்படுத்தினார்.

இந்த நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்குத் தனித்தனியான உத்தியோகபூர்வ அலுவலகங்கள் உண்டு. அவற்றின் நிர்வாகமும் பாதுகாப்பும் சபாநாயகருக்கே உரித்தானவை. ஜனாதிபதி இல்லாதவேளை பொ.ஐ.மு. உறுப்பினரான மங்கள சமரவீர ஜனாதிபதியின் பிரத்தியேக அறையில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தினார். இக்கூட்டத்தில் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் கலந்துகொண்டார்.

ஜே.வி.பியினரின் கடந்தகால சரித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காக்கைதீவில் இளைஞர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஓக.29

காக்கைதீவு இறங்குதுறையில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவற்கட்டைச் சேர்ந்த மகான் மகானந்தம் (வயது 23) என்னும் இளைஞரே தாக்கப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை கடலுக்குச் சென்று மீன்பிடித்துவிட்டு கரைதிரும்பிய இவர் தனது நண்பர்களுடன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இல்லாமலே நேற்று அமைச்சரவை கூடிக் கலைந்தது

### 18ஆவது அரசமைப்புத் திருத்தம் தாமதம்

கொழும்பு,ஓக.29

ஜனாதிபதி இல்லாமலேயே நேற்று அமைச்சரவை பிரதமரின் தலைமையில் கூடிக் கலைந்தது. 18ஆவது அரசமைப்புத் திருத்தம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. எனினும் அதுபற்றி முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. அதனால் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவது தாமதமாகிறது.

ஜனாதிபதி வெளிநாடு சென்றிருக்கிறார். அவர் இன்று நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கு வசதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து கட்சித் தலைவர்கள் இன்று முடிவு

கொழும்பு,ஓக.29

அரசின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை இன்று நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்வதா என்பது குறித்து இன்று காலை நடைபெறும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்படவிருக்கின்றது.

இந்தப் பிரேரணையை இன்றே சபையில் எடுத்து விவாதித்து ஒரே நாளில் நிறைவேற்றுவதற்கு அரச தரப்பு தயாராகியுள்ளது.

ஆனால், குறைந்தது இரண்டு நாள் விவாதம் நடத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வற்புறுத்துகின்றார்.

இந்த நிலையில், இன்று காலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சுக்களில் ஹக்கீம் எந்த அடிப்படையில் பங்குபற்றுவார்?

### மு.கா. உயர்பீடம், அரசியல் குழு ஆராய்ந்தும் முடிவில்லை

கொழும்பு,ஓக.29

தாய்லாந்துப் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் எந்த அடிப்படையில் கலந்துகொள்வார் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இதுகுறித்து ஆராய முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீடமும் அரசியல் குழுவும் நேற்றுமுன்தினம் இரவு அமைச்சர் ஹக்கீமின் அலுவலகத்தில் ஒன்றாகக்கூடின.

தாய்லாந்து செல்லும் அரசுக் குழுவில் ஓர் உறுப்பினராக இடம்பெறுமாறு அமைச்சர் ஹக்கீமிடம் அரசு கோரியிருக்கிறது. ஆனால், ஹக்கீம் அப்படிச் செல்வதை விடுத்து முஸ்லிம்கள் தரப்புப் பிரதிநிதியாகச் சென்று தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று முஸ்லிம் அமைப்புக்கள் அமைச்சர் ஹக்கீமைக் கோரி வருகின்றன.

அரசுப் பிரதிநிதியாக தாய்லாந்து சென்றால் அமைச்சர் ஹக்கீம் சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக நேரிடும் என்று அந்த அமைப்புக்கள் கருதுகின்றன.

தாய்லாந்துப் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித் தரப்பாகவே கலந்துகொள்ளும் என்று பிரபாகரனும் ஹக்கீமும் தங்களின் ஏப்ரல் சந்திப்பின் பின் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாய்லாந்து பேச்சுகளின்போது முஸ்லிம் காங்கிரஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு, அம்பாறை

## கண்காணிப்புக் குழுவினர் 10 பேரும் கௌசல்யனுடன் நேற்றுச் சந்திப்பு!

மட்டக்களப்பு,ஓக.29

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் கண்காணிப்புக் குழுவினர் 10 பேரும் நேற்று கொக்கட்டிச்சோலைக்குச் சென்று மேற்படி மாவட்டங்களுக்கு புலிகளின் புதிய அரசியல் பொறுப்பாளராகப் பதவியேற்றுள்ள சி.கௌசல்யனைச் சந்தித்துப் பேசினர்.

இது ஓர் அறிமுகச் சந்திப்பு. புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் ஆலோசனையின்பேரில் நடந்தது என்று கூறப்படுகின்றது.

இரண்டு மாவட்டங்களிலும் அமைதி காப்பதற்கும் இன ஒற்றுமை

(14ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## முரளி பங்குபற்றும் கிரிக்கெட் முதலாம் திகதி யாழ்.நகரில்!

யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிக்கும், ஜனசக்தி காப்புறுதி நிறுவன அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் செம்ரெம்பர் முதலாம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஜனசக்தி அணியில் உலகின் முன்னணி சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனும் இடம்பெறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கையாக இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் யுத்தநிறுத்தம் அமுலுக்குவந்த பின்னர் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணி வீரர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

ஜனசக்தி அணிக்கு லக்கி ரோஜர்ஸ் பெர்னாண்டோ தலைமை தாங்கவுள்ளார். எஸ்.எஸ்.ஸி. வீரர் ரோஜர் பெர்னாண்டோ, தமிழ் யூனியன் கழக வீரர் ரங்க டயஸ், மொரட்டுவை கிரிக்கெட் கழக வீரர்களான தம்மிக ராஜபக்ஷ, சஞ்சய ராஜபக்ஷ ஆகியோரும் இவ்வணியில் இடம் பெறுகின்றனர்.

சி.சி.சி. மற்றும் என்.சி.சி. அணிகளின் முன்னாள் வீரர் ஆதில் ஹசிம் ஜனசக்தி அணிக்குப் பயிற்சிகளை வழங்குகிறார்.

மேலும் சில டெஸ்ட் வீரர்களை யாழ். செல்லும் ஜனசக்தி அணியில் சேர்ப்பதற்கு ஜனசக்தி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இலங்கை கிரிக்கெட் துறையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது.

அண்மையில் மேற்கிந்திய, ஸிம்பாப்வே அணிகளின் இலங்கை விஜயத்தின்போது நடைபெற்ற போட்டிகளுக்கு இந்நிறுவனமே அனுசரணை வழங்கியது.

இலங்கை அணியில் அண்மைக் கால ஷார்ஜா, இங்கிலாந்து சுற்றுலாக்களின்போது இவ்வணியின் முகாமையாளராக ஜனசக்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சந்ரா ஷாப்டர் பணியாற்றினார்.

முத்தையா முரளிதரனுக்கு ஜனசக்தி நிறுவனம் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனசக்தி அணியுடன் மோதுவதற்கு பலமான அணியொன்றைத் தெரிவு செய்யும் முயற்சியில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எம்.சோமசுந்தரம் ஈடுபட்டுள்ளார். (ம-ரி-86)

## ஜயசூரியாவுக்கு பதிலாக அவிஸ்க

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப்போட்டிக்கான இலங்கைக் கிரிக்கெட் அணியில் அவிஸ்க குணவர்த்தனவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்துள்ள அணித் தலைவர் ஜயசூரியாவுக்குப் பதிலாகவே அவிஸ்க குணவர்த்தன சேர்க்கப்பட்டுள்ளார். இரு வாரங்களுக்கு முன்னர் ஐ.சி.சி. போட்டிக்கான 14பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டது.

இவ்வணியில் அவிஸ்கவையும் சேர்ப்பதற்கு போட்டி ஏற்பாட்டாளர்களான ஐ.சி.சியிடம் விசேட அனுமதி பெறப்பட்டுள்ளது.

- இவ்வாறு கிரிக்கெட் குழுத் தலைவர் கை டி அல்விஸ் கூறியுள்ளார்.

இன்னும் 6 நாள்களில் ஜயசூரியாவின் கையில் போடப்பட்டுள்ள கட்டு அகற்றப்படும். அதன் பின் காயம் குறித்து இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

100சதவீதம் குணமடையாவிட்டால் போட்டியில் பங்குபற்றும்படி ஜயசூரிய வற்புறுத்தமாட்டார்

- இவ்வாறு கை டி அல்விஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொரோக்கோவில் இடம்பெற்ற முக்கோண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியின்போது ஜயசூரிய காயமடைந்தார். அத்தொடரிலும் இறுதிப்போட்டியிலும் அவர் சிறப்பாட்டக்காரர் விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

25வயதான அவிஸ்க குணவர்த்தன 1998முதல் இதுவரை 39 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். 1,135 ஓட்டங்களை அவர் பெற்றுள்ளார். சராசரி 29.10 ஆகும். (ம)

## கென்ய முக்கோண கிரிக்கெட்: பாக். அணிக்குள் மோதல் யுஹானா நாடு திரும்பினார்

கென்யாவில் முக்கோண சுற்றுப் போட்டியில் பங்குபற்றச்சென்ற பாகிஸ்தான் அணியிலிருந்து முன்னணித் துடுப்பாட்ட வீரர் யூஸுப் யுஹானா நேற்றுமுன்தினம் தாயகத்திற்குத் திருப்பியனுப்பப்பட்டார்.

பாகிஸ்தான் அணித் தலைவர் வக்கார் யூனுஸ், பயிற்றுநர் முதாஸர் நாஸர் ஆகியோருடனான மோதலே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் கென்ய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிக்காக கென்யாவுக்குச் சென்ற 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் யுஹானாவும் இடம்பெற்றிருந்தார். செவ்வாயன்று திடீரென அவர் பாகிஸ்தானுக்குத், திரும்பினார்.

பாகிஸ்தான் அணி முகாமையாளர் யவார் சயீட் இவ்விடயம் குறித்து நேற்று அறிக்கையொன்றை விடுத்தார்.

"இச்சுற்றுலாவிலிருந்து விலகி பாகிஸ்தானுக்குத் திரும்புமாறு யூஸுப யுஹானா பணிக்கப்பட்டார். விரிவான அறிக்கையொன்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபைத் தலைவர் தாரிக் ஸியாவுக்கு தொலைபேசிமூலம் விடயம் விளக்கப்பட்டது."

- இவ்வாறு மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குகளை மீறும் வீரர்களைத் திருப்பியனுப்புவதற்கு அணி முகாமைத்துவத்திற்கு அதிகாரம் உள்ளது எனவும் யவார் சயீட் தெரிவித்தார்.

மேலதிக விவரங்கள் எதனையும் தெரிவிக்க சயீட் மறுத்துவிட்டார்.

"கிரிக்கெட் சபைக்குத் தெரிவிப்பதற்கு முன் அதைப் பகிரங்கப்படுத்துவது விரும்பத்தக்கதல்ல" என்று சயீட் கூறினார்.

ஆனால், அணித்தலைவர் வக்கார் யூனுஸுடனும் பயிற்றுநர் முதாஸர் நாஸருடனும் யுஹானா வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

### கரப்பந்தாட்டம்

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் "செற்அப்", "ஓவர்கேம்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.

★ இரவு 8 மணி - அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.க. எதிர் ஆவரங்கால் மத்திய வி.க. 'பி' பிரிவு அணி. (செற்அப்)

★ இரவு 8 மணி - அண்ணாசிலையடி இளைஞர் வி.க. எதிர் சிறுப்பிட்டி கலை ஒளி வி.க. (ஓவர்கேம்).(ம-ரி)

# இலங்கையின் புனர்நிர்மாணத்துக்கு இந்தியா உதவி வழங்கவேண்டும்

## அமைச்சர் மொறகொட புதுடில்லியில் கோரிக்கை

புதுடில்லி,ஓகஸ்ட்29

**விடுதலைப் புலிகளுடன் நடந்துவரும் ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் நம்பிக்கையை வளர்ப்பதாக உள்ளன என்று இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொட புதுடில்லியில் தெரிவித்தார். இலங்கையின் புனர்நிர்மாணப் பணிக்கு இந்தியா உதவவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் விடுத்தார்.**

புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கும் அமைச்சர் மொறகொட நேற்று முன்தினம் இந்திய திட்டக் கமிஷன் துணைத் தலைவர் கே.சி.பந்த்துடன் பேச்சு நடத்தினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் பேசினார்.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக் குறித்து ஏற்பாடுகளைச் செய்ய புலிகளுடன் இதுவரை இரண்டு முறை பேச்சு நடத்தியிருக்கிறோம். அப்பேச்சுக்கள் நம்பிக்கையை வளர்ப்பதாக இருந்தன. இரு தரப்பினரும் நேர்மையான உள்ளத்தோடு தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்கேற்பர்.

சமாதானப் பேச்சுக் குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருக்கிறதே. அது ஏன் என்று சிலர் கேட்கிறார்கள். இலங்கையின் வடக்கில் வாழும் தமிழர்களும், தெற்கில் வாழும் சிங்களவர்களும் சமாதானம் வேண்டும் என்பதற்காகத்தான் பிரதமர் ரணிலுக்கு வாக்களித்துள்ளனர். துப்பாக்கி ஆசாமிகளை மக்கள் புறக்கணித்துவிட்டார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில் இலங்கைக்கு இந்தியா எப்போதும் தார்மீக ஆதரவு அளித்து வந்திருக்கிறது. இந்த நிலையில் இலங்கையின் மறுசீரமைப்புப் பணிக்கு இந்தியா உதவவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ம)

### அரச ஊழியருக்கு கணனிப் பயிற்சி

வடக்கு-கிழக்கில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் ஐ.பி.எஸ். நிறுவனத்துடன் இணைந்து தொலைக்கல்வி கணனிப் பயிற்சி அளித்து வருகிறது.

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கான பயிற்சி நல்லூர் கோயில் வீதியில் உள்ள கட்வாஸ் கணனிப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்று வருகிறது.

வாரத்தில் ஒருநாள் என்ற வகையில் மூன்று வாரங்களுக்கு காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை இப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் அரச ஊழியர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக மாவட்ட முகாமைத்துவ உதவியாளருக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ப-3)

## கண்ணி அகற்றும் பணி சங்கத்தானையில் ஆரம்பம்

பிரிட்டிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி தொடக்கம் கிழக்குப் பக்கமாக சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி வரையான பகுதிகளைப் பரிசோதனை செய்த இவர்கள், இப்பகுதிகளை மிதிவெடி, கண்ணிவெடி உள்ள இடங்களாக அறிவித்துள்ளனர்.

இப்பகுதியில் ஏற்கனவே பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடங்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் படையினர் நிலைகொண்டிருந்த வேளையில் இப்பகுதிகளில் படையினரின் முன்னரங்க காவலரண்கள் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் இப்பகுதியில் பரிசோதனை மேற்கொண்ட கண்ணி அகற்றும் பிரிவினர் 8 கண்ணிவெடிகளை செயலிழக்க வைத்தது தெரிந்ததே.(ம-117)

## தென்மராட்சி தெற்குப் பகுதியில் காலபோக செய்கைக்குரிய பகுதிகள் குறித்த விவரம் படையினரால் அறிவிப்பு

தென்மராட்சி,ஓக.29

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய. நிலப்பகுதிகள் குறித்த விவரம் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கு நேற்று இப்பகுதிகள் படையினரால் காண்பிக்கப்பட்டன.

இதன்பிரகாரம் சாவகச்சேரியிலிருந்து தனங்களப்பு சந்தி வரையில் மேற்குப் பக்கமாக ஒரு கிலோ மீற்றருக்கு அப்பாலும், தனங்களப்பு சந்தியிலிருந்து கோவிலாக்கண்டி சந்தி வரையில் தெற்குப் பக்கமாக 300 மீற்றருக்கு அப்பாலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளலாமெனவும் சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் கிழக்குப் பக்கமாகவும் தனங்களப்பு - கோவிலாக்கண்டி வீதியில் வடக்குப் பக்கமும் பயிச்செய்கைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுணாவில் கிழக்குப் பகுதியில் அண்மையில் படையினரால் வயல்கள் ஊடாக மறவன்புலோவரை அமைக்கப்பட்ட பாதையிலிருந்து கிழக்குப் புறமாக அறுகுவெளிவரை அதி உச்சப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த அறிவித்தலின் பிரகாரம் நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, கைதடி, நுணாவில், மறவன்புலோ, கைதடி - நாவற்குழி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் சில இடங்களில் மட்டுமே நெற்செய்கை மேற்கொள்ளமுடியும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் பணிப்புரையின் பேரில் கமநலசேவைகள் திணைக்கள தலைமைக் காரியாலய பெரும்பாக உத்தியோகத்தர், கைதடிப் பிரிவு பெரும்பாக உத்தியோகத்தர், மறவன்புலோ, தனங்களப்பு ஆகியவற்றின் விவசாய சம்மேளனத் தலைவர்கள் ஆகியோர் எந்தஸ்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு நெற்செய்கை பண்ணப்படக்கூடிய பிரதேசங்கள் காண்பிக்கப்பட்டன. (ம-117)

### தேசிய ஐக்கிய முன்னணி தடைநீக்கத்துக்கு ஆதரவு

புலிகள் மீதான த்டையை நீக்குவதற்கான அரசின் நடவடிக்கையைப் பாராட்டுவதாக தேசிய ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

அங்கட்சியின் தலைவி பேரியல் அஷ்ரப்பும் பிரதித் தலைவர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாவும் இக்கருத்தினை வெளியிட்டுள்ளனர். (ம-12)

### இலங்கை வங்கி விசேட கருமபீடம் நல்லூரில்!

இலங்கை வங்கியின் 63 வருட சேவை நிறைவையொட்டி இலங்கை வங்கி யாழ். மேற்றரக் கிளை நல்லூர் கந்தன் ஆலய சுற்றாடலில் தனது விஷேட கருமபீடம் ஒன்றை அமைத்துள்ளது.

பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக் கல்யாண மண்டபச் சந்தியில் இக்கருமபீடம் அமைந்துள்ளது.

சேமிப்புச் சான்றிதழ், நிலையான வைப்பு, சிறுவர் சேமிப்புக் கணக்கு, மகளிர் பொற்கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்கு, வெளிநாட்டு உண்டியல் ஏற்றுக்கொள்ளல் மற்றும் இளைஞர் சேமிப்புக் கணக்குப் போன்ற சேவைகளை இவ்விஷேட கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

## தடை நீக்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டம்

விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்வரும் 6ஆம் திகதி அரசு நீக்கும் என்று தெரிவிக்கப்படும் வேளையில் தடை நீக்கத்தை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடத்துவதற்கு சிலர் இரகசியமாகத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 6ஆம் திகதி விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதைக் கண்டித்தும் அதனைத் தடுக்கவும் கோரியே சில சிங்கள, பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை நடத்தவுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை -

கண்டி பௌத்தபீடாதிபதிகளையும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துடன் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களையும் இந்தக் குழு நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

### வாழைப்பழ கூ.ச இயக்குநர்களாக ஐவர் நியமனம்

வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச் சங்கத்திற்கு இயக்குநர்களாக ஐவர் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கனகசபாபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர். எஸ்.சண்முகநாதன் (தலைவர்), அ.க.த.கிருஷ்ணராசா, வைத்தியராசா, சு.சுப்பிரமணியம், த.காசிநாதர் ஆகியோரே இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

### ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இன்று நாடு திரும்புகிறார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் லண்டன் சென்ற ஜனாதிபதி நாடாளுமன்றில் அவரது அதிகாரங்களைக் குறைப்பதற்கான சட்டமூலம் கொண்டுவரப்பட இருப்பதால் விரைவில் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டே நாடு திரும்புகிறார்.(ம-12)

## நாகப்பா கடத்தல் விவகாரம்:

# பழ.நெடுமாறன் சகாக்கள் மீது பழிபோடுகிறார் ஜெயலலிதா!

சென்னை,ஓக.29

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை சந்தனமரக் கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்றதற்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் அவரது சகாக்களின் நடவடிக்கையே காரணம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற றஞ்சாட்டியுள்ளார்.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கர்நாடகத்தில் அதிரடிப்படைக்கு ஐ.ஜி. கெம்பையா தலைவராக இருந்தார். வீரப்பனின் நடமாட்டத்தை அவர் கட்டுப்படுத்தினார்.

சமீபத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனும், அவருடைய கூட்டாளிகள் சிலரும் கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்தனர். பத்திரிகையாளர்கள் குழுவும் தனியாகச் சென்று கிருஷ்ணாவைச் சந்தித்தது.

இரு குழுவினரும் கிருஷ்ணாவுடன் என்ன பேசினார்கள் எனத் தெரியவில்லை. ஆனால், தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப அவருடைய மனதை இவர்கள் மாற்றிவிட்டதாக மட்டும் தெரிகிறது.

இச்சந்திப்புகளுக்குப் பிறகு, கர்நாடக அதிரடிப்படைத் தலைவர் பொறுப்பில் இருந்த கெம்பையா மாற்றப்பட்டு, வேறு ஓர் அதிகாரி அப்பொறுப்பில் நியமிக்கப்பட்டார்.

தமிழக, கர்நாடக அதிரடிப்படைகளுக்குச் சேர்த்து தலைவராக வால்டர் தேவாரம் செயல்பட்டபோது நல்ல



ஒத்துழைப்பு இருந்தது. கர்நாடகத்தில் அதிகாரி மாற்றப்பட்ட பிறகு, இந்த ஒத்துழைப்பு சரியாக இல்லை எனத்தெரிகிறது. இதனால் சந்தன மரக் கடத்தல் வீரப்பனுக்கு புதிய தெம்பும் துணிவும் வந்திருக்கிறது.

வீரப்பனைப் பிடிக்கவேண்டும் என்பதுதான் தமிழக அரசின் முக்கிய நோக்கம். எனவே, இந்த விடயத்தில் கர்நாடக அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்போம்.

தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த எல்லைப் பாதுகாப்புப் படையை மத்திய அரசு வாபஸ் பெற்றுவிட்டது. பலமுறை நாங்கள் கூறியதையும் கேட்கவில்லை. மீண்டும் இப்படையை அனுப்புமாறு மத்திய அரசிடம் வலியுறுத்துவோம். ஆனால், இப்படையால் வீரப்பனைத் தேடும் பணியில் எந்த இலாபமும் கிடைக்கப்போவதில்லை என கருதுகிறேன்.

வீரப்பனிடம் பேச தூதர்கள் யாரையும் அனுப்புவது பற்றிய கேள்வி இப்போது எழவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை உருவாகவில்லை.

வீரப்பனைத் தேடும் பணியில் இராணுவத்தின் உதவியை கேட்கும் எண்ணம் இல்லை. அந்தக் காட்டுக்குள் இராணுவத்தால் சிறப்பாக பணியாற்ற முடியும் என நான் கருதவில்லை என்றார் ஜெயலலிதா. (ஓ)

## 'நாகப்பா தலையை வெட்டுவேன்' வீரப்பன்

தன்னுடைய நிபந்தனைகளை நிறைவேற்றாவிட்டால், நாகப்பாவின் தலையை வெட்டப்போவதாக சந்தன மரக்கடத்தல் வீரப்பன் ஒலிநாடாவில் எச்சரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாகப்பாவைக் கடத்தியபோது அவரது மனைவியிடம் வீரப்பன் ஓர் ஒலிநாடாவை கொடுத்திருக்கிறார். கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு வீரப்பன் கூறுவதாக அது உள்ளது.

'ராஜ்குமார் கடத்தலின்போது நான் முன்வைத்த கோரிக்கைகள் எதனையும் நிறைவேற்றாமல் என்னை ஏமாற்றிவிட்டீர்கள். இந்தமுறை நான் ஏமாற மாட்டேன்.

எனது கோரிக்கைகளை, நிறைவேற்றவில்லை எனில், இவனின் (நாகப்பா) தலையை வெட்டுவேன்' என்று வீரப்பன் அதில் கூறியிருக்கிறார்.

கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் கெடு எதையும் வீரப்பன் நிர்ணயிக்கவில்லை என்று கூறப்படுகிறது. (ஓ)

# பேரக்குழந்தைகளுடன் அமர்ந்து ஆபாசப்படம் பார்க்கிறார் பிரதமர்!

## மலேசியாவில் குற்றச்சாட்டு

கோலாலம்பூர்,ஓக.29

மலேசியாப் பிரதமர் மகதீர் முகமட் தன் பேரக்குழந்தைகளுடன் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு ஆபாசப்படங்களைப் பார்ப்பதாக எதிர்க்கட்சிப் பிரமுகர் புன்னியாமின் யாகோப் குற்றம் சாட்டினார்.

இஸ்லாம் மலேசியா கட்சியைச் சேர்ந்த அவர்மீது பொலீஸில் புகார் செய்யப்பட்டது. பொலீஸார் அவரைத் தேடிவந்தனர். கிட்டத்தட்ட 40 நாள்களாக பொலீஸாரிடம் சிக்காத அவர் நேற்றுமுன்தினம் கோலாலம்பூர் பொலீஸ் தலைமை அலுவலகத்துக்கு தன் சட்டத்தரணியுடன் சென்றார்.

கிட்டத்தட்ட 4 மணிநேரம் பொலீஸில் அவர் வாக்குமூலம் கொடுத்தார். அதிலேயே பிரதமர் குறித்த குற்றச்சாட்டை அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

# பிரேஸிலில் மூண்ட காட்டுத்தீயில் குரங்குகள் சரணாலயம் எரிந்தது!

சாவோபாவ்லோ,ஓக.29

தென் அமெரிக்காவில் உள்ள பிரேஸில் நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ 3 நாள்கள் விடாது பற்றி எரிந்தது. இதில் போகோ டாஸ் ஜுண்டாஸ் என்ற காட்டுப் பகுதியில் நான்கில் ஒரு பங்கு அழிந்துபோனது.

இந்தக் காட்டுப் பகுதியில் அரியவகை குரங்கு இனங்கள் வசித்து வருகின்றன. இவற்றுக்கு இந்தத் தீ பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

தீயை அணைப்பதற்காக 110 தீயணைப்பு வீரர்கள் போராடிவரும் நிலையில், பலத்த காற்றுக் காரணமாக தீ வேகமாகப் பரவி வருகிறது. 3 நாள்களில் பற்றி எரிந்த தீயில் 3 ஆயிரத்து 210 ஏக்கர் வனப்பகுதி அழிந்துபோயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# பெண் எழுத்தாளரின் நாவலுக்குத் தடை

டாக்கா,ஓக.29

பங்காளதேஷைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன். மருத்துவரான இவர், பின்னர் எழுத்தாளராகி பல நாவல்களை எழுதி பெரும் பரபரப்பை உண்டாக்கினார். மதத்துக்கு விரோதமாக எழுதுவதாக எதிர்ப்பு ஏற்பட்டதால் இவர் 1994ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு படகில் தப்பி ஓடினார். சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழ்ந்துவிட்டு இப்போது அவர் இந்தியாவில் உள்ள கொல்கத்தாவில் தங்கியிருக்கிறார்.

அங்கிருந்து ஒரு நாவல் எழுதி இருக்கிறார். அதன் பெயர் 'பலத்த தென்றல்'(டொஸ்ஹவா) இந்த நாவலை பங்காளதேஷ் அரசு தடை செய்து இருக்கிறது.

இஸ்லாமிய மத விரோத கருத்துக்கள் இருப்பதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இவர் எழுதிய 'என் பெண் பிராயத்தில்' (அமர் மேயா பேலா) 'வெட்கம்' (லஜ்ஜா) ஆகிய நாவல்களும் ஏற்கனவே பங்காளதேஷில் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# ஈராக் மீது போர்தொடுக்க புஷ்ஷுக்கு அதிகாரம் உண்டா?

## அமெரிக்காவில் இழுபறி

வாஷிங்டன்,ஓக.29

நாடாளுமன்றத்திடம் அனுமதி கேட்காமல் ஈராக்மீது அமெரிக்க அதிபர் புஷ் போர்தொடுக்கக்கூடாது என்று அமெரிக்க ஜனநாயகக் கட்சி கூறி வருகிறது. ஆனால், இதை அதிபர் மாளிகை மறுத்திருக்கிறது.

நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமலேயே ஈராக்மீது போர்தொடுக்க அதிபருக்கு அதிகாரம் உண்டு என்று அதிபர் மாளிகைச் செய்தித் தொடர்பாளர் பிளச்சர் கூறியிருக்கிறார்.

'1991ஆம் ஆண்டு ஈராக் போர் நடக்கும்போதும், கடந்த ஆண்டு நடந்த தீவிரவாதிகளின் விமானத் தாக்குதலுக்குப் பிறகும் இதற்கான அதிகாரத்தை அதிபருக்கு நாடாளுமன்றம் வழங்கியிருக்கிறது. ஆனாலும், போர்தொடுப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்திடம் புஷ் அனுமதி கேட்பார்' என்று பிளச்சர் கூறினார். (ஓ)

# பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமை விஷம்வைத்துக் கொல்ல முயற்சி!

## அமெரிக்கப் பெண் கைது

லண்டன்,ஓக.29

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் எட்வர்ட்கென்னடி ஆகியோரை விஷம் வைத்துக் கொல்ல முயன்ற அமெரிக்கப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அமெரிக்காவில் உள்ள மான்டானா மாகாணத்தில் இருக்கும் வாகன் நகரில் வசித்துவருபவர் தஷாலா கேய்மன்(வயது 22). தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இவர்மீது சமீபத்தில் கடன் அட்டை மோசடிக் குற்றஞ் சுமத்தப்பட்டது.

திருட்டுக் கடன் அட்டையை பயன படுத்தி இவர் கைத்துப்பாக்கி வாங்கியபோது போலீஸில் பிடிபட்டார். இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடந்துவந்தது.

இந்த நிலையில், தஷாலா கேய்மன் சுமார் 900 கிராம் எடையுள்ள சோடியம் சயனைடு எனப்படும் கொடிய ரசாயன மருந்தை தபால்மூலம் வாங்கியிருப்பதாகவும் -

பின்னர் ஒரு முகவரிக்கு ஒரு பொதியை அனுப்பியிருப்பதாகவும்- அமெரிக்க உளவுத்துறை நிறுவனமான எவ்.பி.ஐக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொலீஸார் வாகன் நகர தபால் நிலையத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்கள். அப்போது வாகன் நகரில் இருந்து வாஷிங்டனுக்கு ஒரு தபால் பொதியை கேய்மன் அனுப்பியிருந்தமை தெரிந்தது.

வாஷிங்டன் நகர பொலீஸாருக்கு இதுகுறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வாஷிங்டன் தபால் நிலையம் சென்று குறிப்பிட்ட அந்தப் பொதியைக் கைப்பற்றி சோதனையிட்டனர்.

அந்தப்பொதி நாடாளுமன்ற உறுப்பினரான எட்வர்ட் கென்னடிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதில் விஷத்தன்மை மிகுந்த சோடியம் சயனைடு ரசாயனம் இருந்தது.

இதன் பின்னர் பொலீஸார் கேய்மன் வீட்டை சோதனையிட்டனர். அங்கு இன்னொரு பொதியிருந்தது. அதில் குளிர்பானப் போத்தல் இருந்தது. 'குளிர்பானம் குடியுங்கள்..... சந்தோஷமாக இருங்கள்.....' என்ற வாசகம் எழுதிய கடிதமும் இருந்தது.

இந்தப் பொதி பிரிட்டிஷ் பட்டத்து இளவரசர் சார்லசின் மூத்த மகன் இளவரசர் வில்லியம் பெயருக்கு அனுப்ப முகவரி எழுதப்பட்டு இருந்தது. இந்தக் குளிர்பானத்தில் சோடியம் சயனைடு விஷம் கலக்கப்பட்டிருந்தது.

பொலீஸார் தஷாலா கேய்மனை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். நீதிமன்றத்தில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அவர் மறுத்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, கேய்மனுக்குப் பிணை வழங்க மறுத்து காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (ஓ)

# தாய்நாட்டிலிருந்து வெளியேற பெரும்பாலான பிரிட்டிஷார் ஆவல்

## கருத்துக்கணிப்பில் தெரியவந்தது

பிரிட்டிஷாரில் பெரும்பாலானோர் அந்நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளில் குடியேற விரும்புகின்றனர் என்று அங்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் தெரியவந்துள்ளது.

அந்நாட்டில் நிலவும் கடும்குளிர், அதிக விலைவாசி ஆகியவற்றை தாங்கமுடியவில்லை என்று பிரிட்டிஷார் தெரிவித்துள்ளனர்.

'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பிலேயே இது தெரியவந்துள்ளது. அமெரிக்கா, ஸ்பெயின், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறவிரும்புவதாக 54 சதவீத பிரிட்டிஷார் கூறுகின்றனர்.

'குடும்பத்தினர் மற்றும் நண்பர்களை விட்டுப்பிரிய மனமில்லாமல் இங்கே இருக்கிறோம். பிரிட்டனின் பெருமைமிகு வரலாறும் இங்கு நாங்கள் இருக்கக் காரணம்' என்று ஆய்வுகள் கூறினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 1948 ஆம் ஆண்டிலும் இதே போன்று கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அப்போது 42 சதவீத மானோர் வெளிநாடுகளில் குடியேற விருப்பம் தெரிவித்தனர்.

1975ஆம் ஆண்டு கருத்துக்கணிப்பு நடத்தியபோது 40 சதவீதம் பேர் நாட்டை விட்டு வெளியேற விரும்பினர். (ஓ)

# பாக்.கடற்படையினருடன் மீனவர்கள் கடும் மோதல்!

## 17 பேர் காயம்; இருவர் நிலை மோசம்!

குவெட்டா,ஓக.29

பாகிஸ்தானில் கடற்படையினருக்கும், மீனவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டது.

இயந்திரப் படகு வைத்திருக்கும மீனவர்களுக்கும், நாட்டுப்படகில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும் அடிக்கடி அங்கு மோதல் நடப்பது வழக்கம். இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கும்போது, அந்தப் படகுகள் சிறு மீனவர்களின் வலைகளை அறுத்து விடுகின்றன. அத்தோடு இயந்திரப் படகுகள் மீன்களை பெருமளவில் அள்ளிச் சென்றுவிடும்போது சிறு மீனவர்களுக்கு மீன்களே கிடைக்காமல் போய்விடும்.

இதனால் பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் கடலோரத்தில் இயந்திரப் படகுகள் வலைவிரித்து மீன் பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை மீறி இயந்திரப் படகுகள் அங்கு மீன் பிடித்து வந்தன. இதை எதிர்த்து சிறிய மீனவர்கள் போராட்டம் நடத்தினர்.

குவாதர் என்ற இடத்தில் இந்த போராட்டம் நடந்தது. அப்போது போராட்டக்காரர்கள் கடற்படை ஜீப்பைத் தாக்கிச் சேதப்படுத்தினர். அதோடு கடற்படை வீரர்களையும் தாக்கினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது கடைகளுக்கு தீ வைக்கப்பட்டது.

இந்த மோதலால் ஆத்திரம் அடைந்த கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 17 போ காயம் அடைந்தனர். இந்த மோதலில் 3 கடற்படை வீரர்களும் காயம் அடைந்தனர்.

கூட்டத்தைக் கலைப்பதற்காக துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. மீனவர்களைக் கொல்வதற்காகவே துப்பாக்கியால் சுட்டுள்ளனர் என்று பலுசிஸ்தான் தேசியக்கட்சித் தலைவர் சர்தார் அக்தர் மங்கள் கூறி இருக்கிறார்.

காயம் அடைந்தவர்களில் 2 பேரின் நிலைமை மோசமாக இருந்ததால் அவர்கள் கராச்சி ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்காககொண்டு செல்லப்பட்டு உள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது வேலை நிறுத்தமும் நடத்தப்பட்டது. (ஓ)

# சிங்கத்துக்கு ஐஸ்கிரீம் கொடுக்க முயற்சித்த இளைஞருக்கு அபராதம்!

சிங்கத்துக்கு ஐஸ்கிரீம் கொடுக்க முயற்சித்த இளைஞருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

19 வயதான அந்த இளைஞரின் பெயர் ஸ்காட் டோன்லன் பிரிட்டனைச் சேர்ந்தவர். நிகுவேயில் உள்ள மிருக காட்சிச் சாலைக்கு 2 நண்பர்களுடன் சென்ற அவர் கூண்டுக்குள் ஓர் ஆண் சிங்கமும், பெண் சிங்கமும் உலவுவதைப் பார்த்தார். கடுமையான வெயில அடித்ததால் சிங்க ஜோடிக்கு ஐஸ்கிரீம் கொடுத்தால் என்ன என்ற எண்ணம் டோன்லனுக்கு ஏற்பட்டது. உடனே அருகில் இருந்த கடைக்குள் புகுந்து வாளி நிறைய ஐஸ்கிரீமை திருடினார். பிறகு அந்த ஐஸ்கிரீம் வாளியுடன் சிங்கக் கூட்டை சுற்றிப் போடப்பட்டிருந்த வேலிமீது ஏறி உள்ளே குதித்துவிட்டார்.

அதைப் பார்த்தவர்கள் பதறிப் போய் நிர்வாகிகளுக்கு முறைப்பாடு செய்யவே அவர்கள் அவசரமாக ஆட்களை அனுப்பி டோன்லனை காப்பாற்றினார்கள். இல்லாவிட்டால் சிங்கங்களுக்கு அவர் இரையாகி இருப்பார். இளைஞனை பொலீஸார் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்.

'டோன்லன் குடிபோதையில் இப்படி நடந்துகொண்டார் மன்னிப்பு அளியுங்கள்' என்று அவனது சட்டத்தரணி கேட்டுக்கொண்டார். ஆனால், 50ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு கூறப்பட்டது. அவர் பார்த்துவந்த வேலையும் பறிபோய்விட்டது. (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ ராஜ், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (7524)

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவாபரட், விஞ்சோஸ், ஆபிரிக்க லவ்பேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ண மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7548)

நல்லூர் கோயில் வீதியில் மூன்று பரப்புக் காணியில் அமைந்த இரண்டு மாடி வீடுகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. (கந்தன் கருணைக்கு அண்மையில்) தொடர்பு: திருமதி குமாரசாமி, 427, கோயில் வீதி, நல்லூர். (7577)

சிங்கப்பூரில் இருந்து புதிதாக தருவிக்கப்பட்ட **Daba Video SE - 200 Pro** என்ற **Video Audio Mixture** விற்பனைக்கு உண்டு. அதுடன் 30mm என்லாஜர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42/9, இராஜேந்திரா வீதி, குருநகர். (7615)

பேக்கரி பாவனைக்கு உகந்த மூன்று வேப்பம் பலகையாலான மேசைகள், மரத்தினாலான சோக் கேஸ், பாண் அச்சுத் தட்டுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். **T.P.**:3818. (7554)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலிப் பண்ணையின் கோழிக்குஞ்சுகள் எதிர்வரும் 31.08.2002ஆம் திகதி விநியோகிக்கப்படும். புறொயிலர் 42/=, பேடு 37/=, சேவல் 5/= தேவையானோர் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 123, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (7594)

**Prima Broiler** குஞ்சின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 05-09-2002 வியாழக்கிழமை பிற்பகல் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். முதல்நாள் தடுப்பு மருந்து இலவசம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (7629)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36வயதுடைய, 2இல் செவ்வாய், (மகரம்) நட்ஷத்திரம் உத்தரட்டாதி 4ஆம் கால், கிரக பாவம் 231/2 உடைய அரசாங்கத்தில எழுதுநராக கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணப்பெண் தேவை. குடும்ப விவரம் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1620, மே/பா, உதயன். (7624)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, செவ்வாய் தோஷமற்ற, விசாக நட்சத்திரம், கிரகபாவம் 5 உடைய, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1619, மே/பா உதயன். (7625)

## தவறிவிட்டது

விடத்தற்பளை, மிருசுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி கனகாம்பிகை என்பவரது தேசிய அ.அ. (526015010V), விசேட அ.அ. (091032634), தொழில் அடையாள அட்டை என்பன 26.08.2002 அன்று நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K.கந்தவேள், மாவடி, கரவெட்டி கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (7631)

நவாலி வடக்கு, மானிப்பாய் என்ற முகவரியிடப்பட்ட தர்மலிங்கம் ஜயந்தன் என்பவரது தேசிய அ.அ. (இல.803132127V) முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **No.20**, 'நியூகெவன்', பொற்பதி றோட், கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7613)

## கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு கிழமை நிரம்பிய **Prima** பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7595)

## ஈவினைப் பகுதி மக்கள் கவலை

யாழ்ப்பாணம்,ஓக.29

ஈவினைப் பகுதியில் விநியோகிக்கப்படும் மின்சாரம் மிகவும் வலுக்குறைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இரவு 11 மணிவரை மின்குமிழ்கள் மிகவும் மங்கலாகவே ஒளிர்கின்றன.

விவசாயிகளை அதிகமாகக்கொண்டுள்ள இப்பகுதியில் நீரிறைக்கும் மின்சார இயந்திரங்களை தேவையான நேரத்தில் இயங்க முடியாதுள்ளதாக விவசாயிகள் குறை கூறுகின்றனர்.

நகர மையத்திலிருந்து ஒதுக்குப்புறத்திலிருப்பதனால் தமது ஊருக்கான மின்சார விநியோகம் மட்டுமன்றி வீதித்திருத்தப்பணி போன்றவற்றிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசிரத்தை காட்டுவதாக அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர். (ஓ-69)

## பாடிக்கொண்டிருந்த வானொலிப்பெட்டி அபகரிப்பு!

வீட்டுக்குள் பாடல் ஒலித்துக் கொண்டிருந்த வானொலிப்பெட்டி திருடப்பட்ட சம்பவம் ஈவினைப் பகுதயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

இரவுவேளையில் சிறுநீர் கழிப்பதற்காக வீட்டின் உரிமையாளர் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றதாகவும் -

அவ்வேளை வீட்டினுள் நுழைந்த திருடன் வானொலிப்பெட்டியை அபகரித்துச் சென்றுவிட்டதாகவும்-தெரிவிக்கப்பட்டது. வீட்டு உரிமையாளர் வெளியே சென்றசமயத்தில் வானொலியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. (ஓ-69)

## பிற்போடப்பட்டுள்ளது

**31.08.2002** சனிக்கிழமை நடைபெறவிருந்த வல்வெட்டித்துறை ஊறணி - குடியேற்றம் காந்தி சனசமூக நிலையத் திறப்புவிழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

காந்தி சனசமூக நிலையம்,
ஊறணி குடியேற்றம்,
வல்வெட்டித்துறை.

- நிர்வாகத்தினர்.

(7628)

## யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் (நாச்சிமார்கோவில்) கட்டுக்குள கந்தசுவாமி கோவில்

**மேற்படி ஆலயங்களின் வளர்ச்சிக்காக**

**புதிய திருப்பணிச்சபை ஒன்றைத் தெரிவுசெய்தல்**

*இடம்:* ஆலய மண்டபம்
*நாள்:* இன்று (29.08.2002) வியாழக்கிழமை
*நேரம்:* பிற்பகல் 2மணி (பழைய நேரம்)
*தலைமை:* ஆலய தர்மகர்த்தாவும் ஆதீன குருவும் க.ந.சபாரத்தினக் குருக்கள்

இன்று மதியம் விசேட பூசையும் அன்னதானமும் வழங்கப்படும். இந்நிகழ்விற்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கு வாழ் மக்கள் அனைவரையும் வருகைதந்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்,
ஆலய தர்மகர்த்தாவும்,
ஊர்மக்களும்.

(C-23314)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 03 - 1944



மறைவு 01 - 09 - 1999

அமரர்

## சின்னையா வேலாயுதபிள்ளை

திதி:- 29.08.2002

எங்கள் அன்புத் தெய்வம் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பழம் வீதி,*
*கந்தர்மடம்.* (7627) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 08 - 1934



மறைவு 08 - 09 - 2001

## அமரர் பொன்னுத்துரை சிங்கராசா

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
ஆயிரமாயிரம் உறவுகள் இருந்துமென்ன, அப்பா
என்றழைக்க எம்மிடம் நீங்கள் இல்லையே அப்பா!
நோய் கண்டவுடன் நொடிப் பொழுதில் மறைந்ததென்ன?
முதலாம் ஆண்டு உருண்டோடி விட்டாலும் இன்னும்
பல்லாண்டுகள் வந்து போனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனதை விட்டகலாது!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (7541) - குடும்பத்தினர்.

## சாவகச்சேரி நகரசபை

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 16.09.2002 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் 11.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

வேலைகளுக்கு நேரே குறிப்பிடப்படும் தரத்திலுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரத்தை கோருவதற்குத் தகுதியுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்குமுன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல | வேலை விவரம் | பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | பொதுச் சந்தை தற்காலிக கடைகள் நிர்மாணம் | இக்ராட் 7 | 26000/- | 500/- |
| 02. | சாவ. மீன்சந்தைக் கொட்டகை திருத்தம் | இக்ராட் 8 | 11000/- | 500/- |
| 03. | சாவ. நகர பொது மலசல கூடம் அமைத்தல் | இக்ராட் 8 | 13000/- | 500/- |
| 04. | பொலீஸ் நிலைய வீதி திருத்தம் | இக்ராட் 9 | 1000/- | 500/- |
| 05. | சண்முகானந்தா வீதி திருத்தம் | இக்ராட் 9 | 1000/- | 500/- |
| 06. | ஐயர் ஒழுங்கை திருத்தம் | இக்ராட் 9 | 2000/- | 500/- |

தற்போது அரசாங்கத்தினால் ஜி.எஸ்.ரி வரி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பெறுமதிகூட்டல் வரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ஒப்பந்தகாரர் உரிய கொடுப்பனவின்போது இவ்வரிக்கு உட்படுத்தப்படுவர்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 11.09.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் கேள்விவைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன்மூலம் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பெனடிக் தனபாலசிங்கம்
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*26.08.2002*

(C/23318)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா அன்னப்பிள்ளை

(பொற்கொடி)

முடக்கு வேம்படி, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா அன்னப்பிள்ளை அவர்கள் 27.08.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் இரத்தினம், சரசு, செங்கமலம், சுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சிவானந்தம், நித்தியானந்தம், சர்வானந்தம், தேவகுமார், இராசகுமார், சரோஜாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் லீலாவதி, மல்லிகாதேவி, கெங்காதேவி, நாகரஞ்சினி, பராசக்தி, தயானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி தபோதரன் றஜனி, சுரேஸ், வதனி, யாழினி, சுபாஷ், ஜெயந்தி, உஷந்தி, கயந்தி, கார்த்திகா, மிதுலன், நிதர்ஷனா, நிருயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தீஷ்சிதாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.08.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம்.* (7630) தகவல்: பிள்ளைகள்.

உதயன்

## சட்டப் பிரமாணம்மூலம் ஒப்பந்தமீறல்!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்குரிய ஆயத்தங்கள் பூர்த்தியாகிவிட்டன. இன்னும் 18 நாள்களில் தாய்லாந்தில் பூர்வாங்கப் பேச்சுக்கள் நடைபெறப்போகின்றன. வேறுவிதமாகக் கூறுவதானால் செப்ரெம்பர் 16முதல் 18வரை தாய்லாந்தில் பேச்சுக்கான பேச்சு இடம்பெறப்போகின்றது.

இலங்கையின் பல தசாப்தகால இனப்பூசலுக்கு அமைதிவழியில் தீர்வுகாணப்படும் என்ற நம்பிக்கை மலர்ந்துள்ளது. சமாதான முயற்சிகள் ஆமைவேகத்தில் நகர்ந்தாலும் - அதற்கான பாதை கரடுமுரடானதாக இருந்தாலும் - ஒவ்வொரு அடியும் திடமாக முன்வைக்கப்படுவதாக மக்கள் நம்புகின்றனர்; நம்பிவந்தனர்.

ஆனால், அதில் சந்தேகக் கீறலை ஏற்படுத்தும் விதத்தில் இப்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சமாதான முயற்சிகளுக்கு அடித்தளமாக அமைந்தது அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை. அதிலேயே வெடிப்பு வந்திருப்பது போன்ற செய்திகளே இப்போது வெளியாகியிருக்கின்றன.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சம் இனிமேல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் எவரும் கைதுசெய்யப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழி.

உடன்படிக்கையின் 2.12 ஷரத்தின்மூலம் இந்த உறுதியை அரசு வழங்கியிருந்தது.

ஆனால், வேறு வடிவத்தில் - வர்த்தமானி அறிவித்தல் பிரமாணங்களின்கீழ் - அதே சட்டத்துக்கு அமைய தமிழ்மக்களைக் கைதுசெய்ய வகைசெய்யும் அறிவிப்பை அரசுத்தரப்பு விடுத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மிகமிக மோசமாக மீறும் செயலாகும்.

சம்பவங்கள்மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவது வேறு. கறுப்பு - 6.வள்ளையில், அச்சில், சட்டப்பிரமாணம்மூலம் அப்பட்டமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசுத்தரப்பு மீற முற்படுவது தமிழர் தரப்பினால் பொறுத்துக்கொள்ளமுடியாததாகும்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் 27ஆவது ஷரத்தின்கீழ் பாதுகாப்பு அமைச்சர் ஆக்கிய சட்டப் பிரமாணங்களில், மீனவர்களோ, வேறு எவரோ மட்டுப்படுத்தப்பட்ட கடற்பகுதிகளுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றிச் சென்றால் அவர்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.1237/20 என்ற இலக்கத்தைக் கொண்ட இந்தச் சட்டப்பிரமாணங்கள் 2002 மே 23ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் எவரும் கைதுசெய்யப்படமாட்டார்கள் என்று ஒப்பமிட்டு, அங்கீகரித்துவிட்டு, அதே சட்டத்தின்கீழ் அவர்கள் கைதுசெய்யப்படுவர் என்ற சட்டப் பிரமாணத்தை வர்த்தமானிமூலம் பகிரங்கப்படுத்துவது ஒப்பந்தம் செய்த மறுதரப்பைக் கிள்ளுக்கீரையாகக் கருதும் செயலன்றி வேறில்லை.

இது குறித்து தமிழர்தரப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து முறையிடுவது காலந்தாழ்த்தாமல் செய்யவேண்டிய கடமையாகும்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்தச் சட்டப் பிரமாணங்களுக்குக் கூடியவிரைவில் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும்; அது நடைமுறை.

ஆனால், பிரமாணங்கள் வெளியாகி மூன்று மாதங்களாகியும் இன்னும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. இந்த விடயம் நாடாளுமன்ற நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனினும், இன்னும் விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவில்லை. இந்தப் பிரமாணங்களுக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பும், பல சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி நேரும் என்றெல்லாம் அஞ்சி அரசு நாள்களைக் கடத்திவருகிறது.

அதேசமயம், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாத இந்தச் சட்டப்பிரமாணங்களை வடபகுதி இராணுவத் தலைமை தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களுக்கு கட்டியங்கூறும் இந்தச் சமயத்தில் இத்தகைய போக்கில் செயற்படுவது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கையேயன்றி வேறில்லை.

பேச்சுத் தொடங்க முன்னர் தீர்க்கப்படவேண்டிய பிணக்கு இது.

### யாழ்.மாவட்டத்தில்

# உதவிப்பணம் பெறுவோர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும் அபாயநிலை!

### சமூகசேவைகள் திணைக்களம் அறிவிப்பு

வலி.வடக்கு,ஓக.29

யாழ்.மாவட்டத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்குவதற்கென மேலதிக நிதி எதுவும் இனிமேல் வழங்கப்படமாட்டாது என்று சம்பந்தப்பட்ட திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வருட இறுதியில் மேலதிகமாகப் பணம் தேவையான பிரதேச செயலகங்களுக்கு உரிய கொடுப்பனவுகளுக்கான பணத்தொகை அனுப்பப்பட்டுவருவது வழமையாகும்.

இதேவேளை - வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் பலவற்றுக்கும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள்மூலம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து எதிர்காலத்தில் இத்தகைய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் வன்னியில் இருந்து மீளக்குடியமர்பவர்களுக்கும் கொடுப்பனவை வழங்க முடியாதுபோகலாம் எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-86)

### குடாநாட்டில் பின்தங்கிய பகுதிகளில்

# பொது அமைப்புக்களின் ஊடாக சமூக அபிவிருத்தித் திட்டங்கள்

### 'கெயர்' நிறுவனம் செயற்படுத்தும்

யாழ்ப்பாணம்,ஓக.29

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் பின்தங்கிய கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்களின் ஊடாக அந்தந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டம் ஒன்றினை 'கெயர்' நிறுவனம் செயற்படுத்தவுள்ளது.

"நாளைய எதிர்காலத்துக்கான முன்னெடுப்புத் திட்டம்" (LIFT) என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்துக்கு 'சீடா' நிறுவனம் நிதியுதவி வழங்கவுள்ளது.

பொது அமைப்புக்களின் செயற்றிறனை அதிகரித்து அவை ஒவ்வொன்றும் தத்தமது பகுதியிலுள்ள மக்களின் பொதுவான பிரச்சினைகள், அவர்களுக்குரிய தேவைகள் என்பவற்றை ஆராய்ந்து, அவற்றுக்குரிய தீர்வுகளைக் கண்டறிந்து உதவித் திட்டங்களைச் செயற்படுத்தும்வகையில் இத்திட்டம் அமைந்திருக்கும் என்று 'கெயர்' நிறுவன இணைப்பாளர் திருமதி ஜோய் றெமிண்டா ஞானேஸ்வரன் தெரிவித்தார்.

விவசாயம், நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் அவற்றைப் பராமரிப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல், சமூக ஆற்றுப்படுத்துகையும் பால்நிலை அபிவிருத்தியும், கடற்றொழில் அபிவிருத்தி, வருமான மட்டங்களை அதிகரித்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும் சமூக அமைப்புக்களுக்கு 'கெயர்' நிறுவனம் பூரண ஊக்குவிப்பை வழங்கும் எனவும் -

அடுத்துவரும் நான்கு வருடங்களுக்கு இத்திட்டம் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படவிருப்பதாகவும் -

இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)



நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இந்துவிடுதிக்குப் பின்புறமாக விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சி அரங்கின் முகப்புத் தோற்றத்தைப் படத்திற்காணலாம்.

# மரக்கூட்டுத்தாபனத்துக்கு விரைவில் காட்சியகம்

### யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.29

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் காட்சிச்சாலையொன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளதாக அண்மையில் யாழ்.வருகைதந்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

மரக்கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுவருகின்ற மரத்தளபாடங்களே இந்த நிலையத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதற்கென தென்பகுதியிலிருந்து மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் உட்படப் பலவகையான தளபாடங்கள் எடுத்துவரப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காட்சிச்சாலையில் தளபாடங்களைப் பார்வையிடும் மக்கள் தமக்கு விருப்பமானவற்றைத் தெரிவுசெய்யும் பட்சத்தில் அவை தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் - கூறப்பட்டது.

இதேவேளை - மரக்கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய அலுவலகத்துக்கென வாகனம் ஒன்றையும் வழங்கவுள்ளதாகத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-10)

### காக்கைதீவில் மீட்கப்பட்ட

# 35 லீற்றர் கசிப்பு அழிக்கப்பட்டது

சண்டிலிப்பாய்,ஓக.29

ஆனைக்கோட்டை - காக்கைதீவு வீதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்தவாரம் 35 லீற்றர் கசிப்பு இளைஞர் குழுவொன்றினால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டில் பெண் ஒருவரால் கசிப்பு விற்பனை செய்யப்பட்டுவருவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே மேற்படி பிரதேச இளைஞர் குழு அங்கு திடீர்ச் சோதனை நடத்தி மேற்படி கசிப்பு பரலை கைப்பற்றியது என்றும் -

பின்னர் அது அவ்விடத்திலேயே ஊற்றி அழிக்கப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - தொடர்ந்தும கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - இளைஞர்குழு சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு எச்சரிக்கை செய்து விட்டுச் சென்றது. (எ-135)

### நாளை

ஆவணி 14
வெள்ளிக்கிழமை
(30.08.2002)
திதி : ஸப்தமி
பிற்பகல் 4.02வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முன்னிரவு 10.37வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம் : 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

செருப்பில்லையே என ஏங்குவதைவிட கால்கள் இருப்பதை எண்ணித் திருப்திகொள்வது நன்று.

### வீதி புனரமைப்புக்கென

# யாழ்.மாநகரசபைக்கு ரூ.25 லட்சம் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.மாநகரசபைப் பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கென புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக மாநகர முதல்வர் செ.கந்தையன் தெரிவித்தார்.

இந்த நிதியின்மூலம் மாநகரசபைப் பகுதியில் புனரமைப்பதற்கென ஏற்கனவே முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட வீதிகள் யாவும் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக முதல்வர் தெரிவித்தார்.

இதேவேளை - மாநகரசபைக்கான உழவு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கென சுகாதார அமைச்சு 12 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய முதல்வர் எடுத்து வந்துள்ளார். (எ-10)

# பிரதேச செயலக மட்டத்தில் பனம் கைப்பணி நிலையங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.29

குடாநாட்டில் தற்போது பனம் கைப்பணிப்பொருள்களுக்கு உருவாகியுள்ள மிகையான தேவையை ஈடுசெய்யும் முகமாக பிரதேச செயலக மட்டத்தில் பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தத்தமது பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள் உட்பட பொது அமைப்புக்களின் ஆதரவுடன் இப்பயிற்சி நிலையங்களை அமைத்துவருகின்றன.

இவை ஒவ்வொன்றுக்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒவ்வொருவரை பனை அபிவிருத்திச்சபை வழங்குகிறது.

இப்பயிற்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்கள் அனைத்தையும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் -

பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)

# கர்நாடக இசைக்கச்சேரி

31.08.2002 சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள எனது புதல்விகளான

**சுவர்ணாங்கி கருணாகரன்** M.A. (இசை)
**சியாமளாங்கி கருணாகரன்** M.A. (இசை)

ஆகிய இருவரினதும் கர்நாடக இசைக்கச்சேரிக்கு வருகைதருமாறு இசை ரசிகர்கள், இசை ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

"சங்கீத வித்வான்"
**A.K.கருணாகரன்.**

(7560)


# விழிப்புக்குழு அமைப்பு

சண்டிலிப்பாய், ஓக.29

சுதுமலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கசிப்பு ஒழிப்பு, திருட்டு மற்றும் சமூகவிரோதச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கென விழிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுதுமலை தெற்கு கிராம அலுவலர் அ.சிவதாஸின் ஏற்பாட்டில் சுதுமலை மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற படி விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. (எ-135)

# பதுங்கு குழியிலிருந்த மனித எச்சங்கள் பொலீஸார்வசம்

தென்மராட்சி, ஓக.29

சாவகச்சேரி கல்வயல் சித்தமாவடிப் பிள்ளையார் கோயில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பதுங்கு குழிக்குள் காணப்பட்ட மனித மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகள், சப்பாத்து, இராணுவச் சீருடை ஆகியவற்றைப் பொலீஸார் எடுத்துச்சென்றனர்.

சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் பொலீஸார் இந்தப் பொருளகளை எடுத்துச்சென்றனர்.

(ஓ-3-31-117)

# பனாட்டு விற்பனை

சாவகச்சேரி,ஓக.29

சாவகச்சேரி கொடிகாமம் பொதுச சந்தைகளில் பனாட்டு அதிகளவில் விற்பனையாகின்றது. ஒரு தட்டு பனாட்டு 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தென்னிலங்கையிலிருந்து வரும் பயணிகள் அதிகமாக பனாட்டினை வாங்கிச்செல்வதைக் காணமுடிகிறது. (ஓ-31)

# திலீபன் நினைவுதின போட்டிகள்

தென்மராட்சி,ஓக.29

வலி.தென்கிழக்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தினர் குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களின் மாணவர்களிடையே தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 15 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு போட்டிகளை நடத்தவுள்ளனர்.

கவிதை, பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள் 10, 11, 12, 13 ஆகிய தரங்களில் கற்கும் மாணவர்களுக்கும் -

சதுரங்கப் போட்டிகள் தரம் 8 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கும் -

கவிதை, பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள் பொதுப் போட்டியாகவும் நடத்தப்படவுள்ளன.

வலயமட்டப்போட்டிகள் செப்ரெம்பர் இருபதாம் திகதிக்கு முன்னர் நடத்திமுடிக்கப்படவேண்டுமென ஒன்றியச் செயலாளர் பெ.கனகசபாபதி அறிவித்துள்ளார். (ஓ-117)

# கல்கியின் சீடர் யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.29

தற்போது இலங்கை வந்துள்ள ஸ்ரீ கல்கி பகவானின் சீடர் ஸ்ரீ சுஜேகிருஷ்ணா சுவாமிகள் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிதொடக்கம் 4ஆம் திகதி மாலை 8.00 மணி வரை குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகளில் இவர் பங்கேற்கவுள்ளார்.

மக்கள் தரிசனம், தியானம், ஆன்மீக அறிவியல் சொற்பொழிவுகள், நோய்பிணி தீர்த்தல் முதலான அரிய செயல்களிலும் சுவாமிகள் ஈடுபடவுள்ளார். (ஓ-12)


# 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் அந்தியேட்டி நிகழ்வு அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 08 |  | 29 |
| - | | - |
| 09 | | 07 |
| - | | - |
| 1928 | | 2002 |

## அமரர் பண்டாரம் தம்பித்துரை

(அம்பாள் சுருட்டுத் தொழிலகம், உரும்பிராய்)

29.07.2002இல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.08.2002) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இந்நிகழ்வில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் பங்குபற்றியேகுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


- பாசமிகு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

(7610)



# உயர் ரக கேபிள்கள்



- ★ கணினி வலையமைப்பு
- ★ தொடர்புப் பரிமாற்றம்
- ★ செய்மதித் தொடர்பு
- ★ ஒலி வாங்கி
- ★ ஒலி–ஒளி கருவிகள்
- ★ தரவு அனுப்பீடு (DATA TRANSMISSION)
- ★ UTP.CAT-5
- ★ MATV & CATV

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

**TV சென்டர்**
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11,
தொ.பேசி: 434742,தொலைநகல் : 437687
மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.

(C/23265)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 |  | 31 |
| - | | - |
| 01 | | 07 |
| - | | - |
| 1917 | | 2002 |

## திருமதி சின்னத்தங்கச்சி வல்லிபுரம்

பாசத்தின் இருப்பிடமாய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி நேரில்வந்து அஞ்சலி செலுத்தியோர்க்கும் தொலைபேசிமூலமும், வேறு பல வழிகளிலும் அனுதாபங்களைப் பகிர்ந்து உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (29.08.2002) வியாழன் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்:*

திருநாவுக்கரசு. முன்னாள் மாநகரசபை உறுப்பினர். தொலைபேசி - 718451,
ஜெயராசா மானிப்பாய்,
ஆனந்தராசா - (ஓய்வுபெற்ற இ.போ.ச.ஊழியர்),
குணசிங்கம - டென்மார்க்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

(7428)



**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

ஆரம்பம்: 30.08.2002

By:
**B.மனோகரன்**
ஆங்கிலக் கல்லூரி
சந்நிதி வீதி, அச்சுவேலி. (7602)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| இகம் | | பரம் |
|---|---|---|
| 06 |  | 24 |
| - | | - |
| 08 | | 08 |
| - | | - |
| 1964 | | 2001 |

## திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்

(B.A.(Hons), Dip.in Edu.(Marit)-
ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

திதி: 29.08.2002

அன்பின் தாயே! பண்பின் உருவமே!(நீ)
பெற்றெடுத்த மழலை சோக இசை பாட
அதைக் கண்டு விம்மி விம்மி அழுகின்றோம் நாம்!
"அம்மா! அம்மா!!" என்று அலறித் துடிக்கின்றோம்
வேகமாக விண்ணிடை விமலனிடம் சென்றிட்ட
விமலாவே! நீ விமல லோஜனிடம் ஓடி வருவாயா?
மாலையிட்ட கணவன் நான் மன்றாடி வேண்டுகின்றேன்
கருவுற்ற நாள்முதலாய் நான் கண்ணீர் மழை சொரிந்து
நின்ற நிலையால் என் வேதனைத் துளிரினை இறையோடு
கலந்து சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

உன் பிரிவால் வாடி வதங்கி நிற்கும்:
கணவர்: தர்மகுலசிங்கம்,
மகன்: விமலலோஜன் மற்றும்
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

*சண்டிலிப்பாய் வீதி,*
*சங்குவேலி,*
*மானிப்பாய்.* (7396)






# நல்லதொரு மாற்றத்துக்கு சக்திமிகு நம்பிக்கை

No.1 CEMENT IN SRI LANKA

MITSUI CEMENT

# அரசமைப்பை அடிக்கடி மாற்றும் விசித்திரம் இங்கு மட்டுமே உண்டு

**நாட்டின் மிகமுக்கியமான பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில், அதிகார இழுபறிகள் காரணமாக சமாதான முயற்சிகள் முடங்கவும் கூடும். மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்பதை மையமாகக்கொண்டு இப்பிரச்சினையை ஆராய்கிறார் "ராவய" வார இதழின் ஆசிரியர் விக்டர் ஐவன். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

பொ.ஐ.முன்னணியைச் சேர்நத ஜனாதிபதக்கும ஐ.தே.முன்னணியைச் சேர்ந்த அரசுக்குமிடையே உருவாகியுள்ள முறுகல்நிலை எவ்வாறு முடிவுக்குவரும்? இது அரசமைப்பைக் காரணமாகக்கொண்டு உருவான பிரச்சினையாகும். பிரதமரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதிமுயற்சியும் இந்த அரசமைப்புத் தொடர்பான சதிமுயற்சி என்ற கணக்கிலேயே அடங்கும்.

நாட்டை ஆளுவதற்கு ஆணை தனக்கே கிடைத்துள்ளதால் புதிய திட்டங்களைத் தடங்கல்களின்றி முன்னெடுப்பதற்கான உரிமை தனக்கே உள்ளது எனப் பிரதமர் நினைக்கிறார். அரசமைப்பு ரீதியாக நாட்டின் தலைவி தானே என்பதால் அரசமைப்பு மூலம் தனக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் உரிமை தனக்கே உள்ளது என ஜனாதிபதி சிந்திக்கிறார்போல் தெரிகிறது.

ஜனநாயக அரசியல் முறையில் அரசமைப்பு என்பது அரச நிர்வாகத்தை மேற்கொள்வது தொடர்பான பொது உடன்பாடு எனக் கருதப்படுகிறது.

ஒரு நாட்டின் அரசமைப்பானது அந்நாட்டு மக்களின் அரசியல் நாகரிகத்தின் அளவை எடுத்துக்காட்டும் உரைகல்லாகக் கருதப்படுகிறது. எந்த ஒரு நாடும் அதன் எதிர்காலத் தேவைகள் குறித்துக் கவனம் செலுத்தாமல் அந்த நேரத்திலுள்ள தேவைகளை மாத்திரம் கவனத்திற்கொண்டு அரசமைப்பைத் தயாரிப்பதில்லை. ஒவ்வொரு நாடும் நூற்றாண்டு காலத்திற்கான அரசமைப்பைத் தயாரிக்குமே தவிர ஒரு குறுகிய காலத்திற்கான அரசமைப்பைத் தயாரிப்பது வழக்கமல்ல. ஆனால், இந்த விடயத்தில் இலங்கை ஒரு புதுமையான நாடாகும். இந்தநாட்டில் ஒவ்வொரு 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசமைப்பு உருவாக்கப்படுகிறது.

உலகில் மிகவும் சுருக்கமான அரசமைப்பு அமெரிக்க அரசமைப்பாகும். அந்த அரசமைப்பு 7 சரத்துக்களை மாத்திரமே கொண்டுள்ளது. கடந்த 200 ஆண்டு காலத்தில் அந்த அரசமைப்பில் 27 திருத்தங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவின் அரசமைப்பே மிகவும் நீளமான அரசமைப்பாகும். அதில் 395 சரத்துக்கள் உள்ளன. கடந்த 50 ஆண்டு காலத்தில் 78 திருத்தங்கள் மாத்திரமே அந்த அரசமைபபில மேற்கொள்ளப்பட்டுள்ளன. முற்றுமுழுதான ஜனநாயக அரசியல் நடைமுறையைக் கொண்டதாகக் கருதப்படும் சுவிற்ஸர்லாந்தின் அரசமைப்பு 123 சரத்துக்களைக் கொண்டதாகும். இருப்பினும், 1848 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அரசமைப்பிற்கு இதுவரை எந்தவொரு திருத்தங்களும மேற்கொள்ளப்படவில்லை.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் 1947இல் சோல்பரி அரசமைப்பு. 1972இல் குடியரசு அரசமைப்பு. 1978 இல் சோஷலிச ஜனநாயகக் குடியரசு அரசமைப்பு என 3 அரசமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இறுதியாக உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கு 24 ஆண்டுகளுக்குள் 17 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது இலங்கையின் சமுதாய, அரசியல் விடயங்களிலுள்ள குறுகிய மற்றும் தரமற்ற நிலைமையை எடுத்துக்காட்டவில்லையா?

எந்தவோர் அரசமைப்பும் மத ரீதியாக, மொழி ரீதியாக, இன ரீதியாக, கலாசார ரீதியாகப் பிரிந்துள்ள அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைந்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட 3 அரசமைப்புகளிலும் அனைவராலும் பொதுவாக ஏற்றுககொள்ளக் கூடியதாக அமைந்தது சோல்பரி அரசமைப்பு மட்டுமே ஆகும். 1972ஆம் ஆண்டில் அரசமைப்புக்கு தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. 1978 ஆம் ஆண்டு அரசமைப்புக்கு தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பு மட்டுமன்றி முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புக் கூடக் கிடைக்கவில்லை.

1946இல் பிரான்ஸில் அரசமைப்புத் தயாரிக்கப்பட்டபோது டிகோல் தனது தேவைகளுக்கு ஏற்பவே அதைத் தயாரித்தார். 1978இல் ஜே.ஆர். தன்னை டிகோல் எனக் கருதி தனது தேவைகளுக்கு ஏற்ப இந்நாட்டு அரசமைப்பை உருவாக்கினார். ஜனநாயக அரசியல்முறையில் இரு முக்கிய கட்சிகளுக்கிடையே அதிகார மாற்றங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். பிரான்ஸில் டிகோல் அரசமைபபை உருவாக்கியதைப் போவே ஜே.ஆரும் இந்த அடிப்படைக்கொள்கையைக் கவனத்தில் எடுக்காது அரசமைப்பைத் தயாரித்துள்ளார்.

1977 பொதுத் தேர்தலில் ஜே.ஆருக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை கிடைத்தது. ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லாமல் ஜனாதிபதியாகத தொடர்ந்து - 2ஆவது ஜனாதபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறைகளுக்கு முரண்படும் விதத்தில் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தி - ஆறில் ஐந்து பெரும்பான்மையைக்கொண்ட நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை மேலும் 6 ஆண்டுகள் நீடித்தார். ஆகவேதான் அந்த ஆட்சிக்காலத்தில் இரத்த ஆறுகள் ஓடினவேதவிர அரசமைப்புத் தொடர்பான பிரச்சினைகள் உருவாக வாய்ப்புக்கள் இல்லாமற்போயின. அதன் பின்னர் இரத்த ஆறுகள் ஓடும் பின்னணியில் நடத்தப்பட்ட 3ஆவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற்று ஜனாதிபதியானார். அதன்பின்னா நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஐ.தே.கட்சி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றதால் அரசமைப்புத் தொடர்பான பிரச்சினைகள் உருவாகாத நிலைமையே நிலவியது.

1994 பொதுத்தேர்தல் முடிவுகள் அதுவரை நிலவிய நிலைமையை மாற்றி அமைத்தது. ஐ.தே.க. ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தவேளையில் நாடாளுமன்ற அதிகாரம் பொ.ஐ.முன்னணிக்கு கிடைத்தது. ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா பேரறிஞராக இல்லாதபோதிலும் பொ.ஐ.முன்னணிக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆணைக்கு எதிராகத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும் கொள்கையை அனுசரிக்காமல் தான ஜனாதிபதிப் பதவியை வகித்த சொற்ப காலத்தில் பொ.ஐ.முன்னணி அரசை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும் கொள்கையை அனுசரித்ததால் அரசமைப்பு ரீதியான பிரச்சினைகள் எவையும் உருவாகவில்லை.

அதன் பின்னர் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் பொ.ஐ.முன்னணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து ஜனாதிபதிப் பதவிக்கான அதிகாரங்களும் நாடாளுமன்ற அதிகாரங்களும் மீண்டும் ஒரே கட்சிக்குக் கிடைத்தன.

அதன் பின்னர் ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிவடைய இன்னும் சில வருடங்கள் இருக்கும் நிலையில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதிலும் வெற்றிபெற்றார். ஜனாதிபதியின் அதிகாரங்களைத் தனது கைகளில் வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி அதிலும் வெற்றிபெறுவதே ஜனாதிபதியின் அபிலாஷையாக இருந்திருக்கவேண்டும். 2000ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்தவெற்றி நூலிழை போன்று அமைந்தாலும் அரசமைப்பு ரீதியாகப் பிரச்சினைகள் உருவாகும் நிலை ஏற்படவில்லை. அந்த நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் ஓர் ஆண்டைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டதால் ஆளுங்கட்சி பெரும்பான்மையை இழந்தது. மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கநேரிட்டது. 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.முன்னணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் அதுவரை நீறுபூத்த நெருப்பாக இருந்த அரசமைப்புத் தொடர்பான சிக்கல்கள் மீண்டும் உயிர்பெறத் தொடங்கின.



நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள இந்த முக்கிய பிரச்சினை தொடர்வதற்கு இடமளித்து வாளாதிருந்த பொறுப்பு நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையுமே சாரும்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பை விமர்சித்தே 1994இல் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வநதார். இருப்பினும் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஏற்றபின்னர் தேர்தலில் கூறியனவற்றை மறந்தார். மாறாக அவருக்கு அதிகார ருசி உருவானது.

இந்த அரசமைப்பு தமது முன்னாள் தலைவர்களால் உருவாக்கப்பட்டதாயினும், அந்த அரசமைப்பு தங்களையும் பாதிககவுள்ளது என்பதை காலநேரத்தில் புரிந்துகொண்டு அதற்குத் திருத்தங்களைக்கொண்டு வருவதற்கான பொறுப்பு ஐ.தே.கட்சிக்கு இருந்தும் அந்தக்கட்சி அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டது.

ஜனாதிபதி புத்திசாதுரியமான தலைவியாயின் 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தனது கட்சி தோலவியைத் தழுவிய பின்னராயினும் இந்த முக்கிய பிரச்சினைக்கு (அரசமைப்புப் பிரச்சினைக்கு) இருதரப்பாரின் உடன்பாட்டுடன் கௌரவத்துடன் கூடிய தீர்வினைக்காண அவருக்கு வாய்ப்புக்கள் இருந்தன. ஜனநாயக அரசியல் வழிமுறையில் ஒரு தேர்தலின்போது கிடைத்த மக்களின் ஆணையானது அதற்த அடுத்துவரும் தேர்தல் முடிவுகளால் செயலற்றதாகிறது.

2001ஆம் ஆண்டு நடைபெற்றது ஜனாதிபதித் தேர்தல் அல்ல. இருப்பினும் பொ.ஐ.முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வழிநடததும் முக்கிய பாத்திரத்தை ஜனாதிபதி ஏற்றிருந்தார். தேர்தலில் மக்கள் ஆணை ஐ.தே.முன்னணிக்குக் கிடைத்ததால் ஜனாதிபதி அதைப் புரிந்துகொண்டு செயற்பட்டிருக்க வேண்டும். எனவே, ஜனாதிபதி தனது பதவியில் இருந்து வெளியேறுவதிலும் மக்கள் ஆணை கிடைத்துள்ள கட்சியினருக்கு இடையூறுகள் எதையுமின்றி ஆட்சிநடத்த வழி அமைத்திருந்தால் அல்லது அதற்குத் தடையாயிருந்த அரசமைப்பு ரீதியான தடைகளைப் போக்க நடவடிக்கை எடுத்திருந்தால் அரசமைப்புச் சிக்கல்கள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்காது. அதேநேரம் ஜனாதிபதியின் அரசியல் செயற்பாடுகளும் சிக்கல்கள் எவையுமின்றி அமைந்திருக்கும்.

பிரான்ஸில் இவ்வாறான பிரச்சினைக்கு இதையொத்த விதத்திலேயே தீர்வுகாணப்பட்டது. சோஷலிசவாதியான மிதறோன் ஜனாதிபதிப் பதவியை வகித்தபோது 1986இல் நாடாளுமன்றத் தேர்தலில் டிகோல்வாதியான ஜக்ஷிராக் பிரதமரானார். இது பிரான்ஸ் நாட்டிற்குப் புதுமையான அனுபவமாக அமைந்தது. ஜனாதிபதி மிதறோன் எமது ஜனாதிபதியைப்போல் மக்கள் கருத்துக்கெதிராக - புதிய பிதமருக்கு எதிராக - செயற்பட முனையவில்லை. அன்று ஜனாதிபதி மிதறோன் அரசமைப்பைக் காட்டி அடம்பிடித்திருந்தால் அந்நாடு பாரிய அரசமைப்பு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும். ஆனால், உள்நாட்டு நிர்வாகம் தொடர்பான பூரண அதிகாரங்களை பிரதமருக்கு வழங்கினார் ஜனாதிபதி மிதறோன்.

ஜனாதிபதியின் அதிகாரம் ஒரு கட்சியிடமும் நாடாளுமன்ற அதிகாரம் பிறிதொரு கட்சியிடமும் செல்லும் சந்தர்ப்பங்களில்கூட அரசமைப்புச் சிக்கல்களின்றி பிரான்ஸ் நாட்டை வழிநடத்த முடிந்ததற்கு ஜனாதிபதி மிதறோன் ஆரம்பித்த அந்த நாகரிக மரபே காரணமாகும்.

இன்று இலங்கைக்கும் தேவைபடுவது அத்தகைய நாகரிக மரபே ஆகும். இவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ளும் அளவிற்கு ஜனாதிபதி (சந்திரிகா) இறங்காவிடின் இருதரப்பினருக்கும் இடையே உருவாகும் மோதல்களால் இருதரப்பினருமே பாதிப்படைய நேரிடும். மேலும் நாட்டில் குழப்பங்கள் உருவாகவும் கூடும். மக்கள் ஆணைமூலம் ஜனாதிபதியைத் தூக்கி வீசக்கூடிய நிலைமைகூட உருவாகலாம். இருப்பினும், அவ்வாறான நிலைமை குறுகிய அரசியல் அர்த்தங்களைக் கொண்டதாக இருக்குமேதவிர நாட்டின் பொது நன்மையைக் கொண்டதாக அமையாது.

☆

**தமிழில்: கஜனி**

# தென்மராட்சிக்கு மின்சாரம் விநியோகிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்!

## மக்கள் நலச்சேவைகள் சங்கம் கோரிக்கை

தென்மராட்சிப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சாரசபையின் யாழ்.மாவட்ட பிரதிப் பொது முகாமையாளரை தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம் கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி சங்கம் மின்சாரசபைப் பிரதிப் பொது முகாமையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுககான மின்சார விநியோகப் பணிகள் பூர்த்தியானதும் தென்மராட்சிப் பகுதிக்கான மின்சார விநியோகத்திற்குரிய பணிகள் ஆரம்பமாகுமென தென்மராட்சியைச் சோந்த சகல தரப்பினரும் எதிர்பார்த்தனர். ஆனால், இன்றுவரை தென்மராட்சிப் பகுதியில் மின்சார விநியோகத்திற்கான எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படாதிருப்பது எமக்கு பெரும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

ஆகவே, எமது சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில், தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளமையும், பாடசாலைகள், அரச, தனியார், திணைக்களங்கள், வங்கிகள், வர்த் தக ஸ்தாபனங்கள் என்பன மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையையும் கருத்திற்கொண்டு தென்மராட்சி பகுதிக்கான மின்சார விநியோகப் பணிகளைத் தாமதமின்றி ஆரம்பிக்கும்படி தங்களை கோருவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையை தங்கள் மேலான கவனத்திறகுக்கொண்டு வருகின்றோம்.

தயவுசெய்து இவ்விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரியநடவடிக்கையை எடுக்கவேண்டுமெனத் தங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# தமிழ்க்கைதிகளின் விடுதலைக்காக நாடளாவிய ரீதியில் போராட்டம்

## தமிழ் எம்.பிக்கள் தீர்மானம்

கொழும்பு,ஓக.29

சிறைகளில் உள்ள தமிழ்க்கைதிகளை விடுதலை செய்யக்கோரி நாடு முழுவதும் போராட்டங்களை அடுத்த மாதம்முதல் மேற்கொளவது என்று தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மனித உரிமைகளுக்கான அபிவிருத்திக்குமான நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

தமிழ்க்கைதிகளை உடன் விடுதலைசெய்யவேண்டும் என்று கோருவது என்றும் -

விடுதலை செய்யாத பட்சத்தில் அடுத்தமாதம்முதல் நாடு தழுவிய போராட்டங்களை மேற்கொள்வது என்றும் - அங்கு முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

# 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**29.08.2002**



## திருமதி றெஜினா ஜெயசீலன்

*நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை*
*உன்னைக் கைவிடுவதுமில்லை.* *யோசுவா 1:5*

அன்புள்ள அம்மா!

உணர்வுதனை உறைய வைத்து
உயிரை உரமாய்த் கொடுத்து
உயிர் வாழ வைத்த தாயே!
அகவை ஐம்பதினில் அவனியில் மானிடம்
மக்களின் மீட்புத் தப்பலாத மீட்பர்
இயேசுவின் ஆசிபெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*எபனேசர் ஆலயம்,*
*வட்டுக்கோட்டை.* (7637)

கணவர், பிள்ளைகள்,
மருமகன்மார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

பூவுலகில் பூவாய் 1942 08 02



வானுலகில் சோதியாய் 31 07 2002

## திருமதி கிருஸ்ணன் மீனாட்சி

பாசத்தின் இருப்பிடமாய் அன்பின் குலவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! அம்மாவே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எங்கள் அன்பு அன்னையின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி நேரில்வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (30.08.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*முதலாம் ஒழுங்கை,*
*ஆனைக்கோட்டை.* (7635)

- குடும்பத்தினர்.

# கர்ப்பிணிகளுக்கு நுளம்புவலை விநியோகம்

தென்மராட்சி,ஓக.29

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கர்ப்பிணிகளுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் தமது பகுதி குடும்ப நல சேவையாளரினால் வழங்கப்பட்ட பராமரிப்பு அட்டையைச் சமர்ப்பித்து நுளம்புவலையினைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அடுத்த கட்டமாக மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மாதகல் நூலகம் மீண்டும் இயங்கும்

சண்டிலிப்பாய்,ஓக.29

மாதகல் இளைஞர் சங்க சனசமூக நிலையத்தின் நூலகத்தை மீண்டும் இயக்குவதற்கு நிலைய நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தினால் இந்த நிலையத்தின் நூலகத்திலிருந்த பெறுமதிமிக்க நூல்கள் காணாமற்போய் விட்டன.

புதிய நூல்களைக் கொள்வனவு செய்து நூலகத்தை மீண்டும் செயற்படவைப்பதற்குத் தீமானிக்கப்பட்டுள்ளதாக நிலையத் தலைவர் மு.ஸ்ரீமோகன் தெரிவித்தார். (எ-135)

# பாடசாலை படையினரால் புனரமைக்கப்படும்

தென்மராட்சி,ஓக.29

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைப் படையினர் தமது செலவில் புனரமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

இப்பாடசாலையில் சேதமடைந்த கட்டடத்தின் ஒரு பகுதியில் வகுப்புகளை இயங்குவதற்காக பாடசாலை வளவில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் கடந்தவாரம் பரிசோதனை நடத்தினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெற்றோரால் சிரமதானம்மூலம் பாடசாலை துப்புரவு செய்யப்பட்டபோது அங்கு வந்த படை அதிகாரி சேதமடைந்த கட்டடப் பகுதியை ஒரு வாரத்தில் புனரமைத்துத் தருவதாகத் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (எ-117)

# எழுத்தாக்க போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.29

மாகாணமட்ட ஆங்கிலமொழித் தினப்போட்டியின் எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதேவேளை - ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் தத்தம் வகுப்புகளுக்குரிய ஆங்கிலபாட நூல்களை எடுத்துவரவேண்டும் என யாழ். கல்விவலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(எ-10)

# மாதாந்த உதவிப்பணம் மீளாய்வு

வலி.வடக்கு,ஓக்.29

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர்களைச் சந்திக்கும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

கிராம அலுவலர்களைச் சந்தித்து கொடுப்பனவை மீளாய்வு செய்பவர்களுக்கு மட்டுமே அடுத்த மாதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-86)


"WE BRING THE WORLD TO YOUR HOME"





யாழ். மக்களுக்கோர் நற்செய்தி!

15 வருட அனுபவம் மிக்க **Sats-Tech** நிறுவனம் தற்பொழுது செய்மதி தொலைக்காட்சி அன்ரனா மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது.

எமது புதிய விலைப்பட்டியல்

*8' System*
1. 8" Economic Digital Package - Rs. 27,500.00
2. 8' Heavy Digital Package - Rs. 30,000.00
3. 8' Advanced Digital Package - Rs. 32,000.00

*10' System*
1. 10' Economic Digital Package - Rs. 35,000.00
2. 10' Heavy Digital Package - Rs. 38,000.00
3. 10' Advanced Digital Package - Rs. 42,000.00

- Free Instalation
- One Year full warrenty for whole System
- Advanced Reception
- Free Technical Support
- Free updating your System

*குறிப்பு:* கடந்த 2 வருடங்களாக யாழ்நகரில் 100இற்கு மேற்பட்ட செய்மதி தொலைக்காட்சி அன்ரனா சிஸ்டங்களை விற்பனை செய்து பராமரித்துவரும் எமது நிறுவனத்திற்கு யாழ். ஸ்ரான்லி றோட்டில் Jaffna Technical Instituteஇல் இயங்கிவந்த விற்பனைப்பிரிவு 29.07.2002 இலிருந்து முதல் எமது தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. எமது வாடிக்கையாளர்கள் எவரும் மேற்படி நிறுவனத்துடன் செய்மதி அன்ரனா தொடர்பாக தொடர்புகொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

*For Further Details*

SATS-TECH ENGINEER'S
M/S National Video centre
182, K.K.S. Road(Near Kulappiddy Church), Kokuvil. For Contact - 077 - 710785
(7640)



உயர்தர பாடங்கள் இரண்டு → இந்தியாவில் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நெஷனல் பஸ்ட்கிரேட் கொலேஜ் → மூன்று ஆண்டுகள் → பெங்களூர் பல்கலைக்கழகப் பட்டம்

பட்டப்படிப்புகள்
- B.B.M. - Business Management
- B.C.A. - Computer Application
- B.Sc. - Computer Science
- B.Sc. - Microbiology
- B.Sc. - Genetics
- B.Sc. - Biotechnology

★ கருத்தரங்கிற்கு கட்டண அறவீடு இல்லை.
★ மாணவ, மாணவிகள் குறைந்தது க.பொ.த. உயர்தரத்தில் சம்பந்தப்பட்ட இரு பாடங்களில் சித்தி.
★ இலங்கையின் 200இற்கும் கூடுதலான மாணவர்கள் 35 நாடுகளின் மாணவர்களுடன் கல்வி பயிலுகின்றனர்.
★ தற்பொழுது 95இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்கின்றனர்.
★ அனுபவமிக்க விரிவுரையாளர்கள், பூரணமான ஆய்வுகூட, நூலக வசதிகள்.
★ ஆண்களுக்கு, பெண்களுக்கு தனித்தனி தங்குமிட வசதி.
★ மாணவர்கள் பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், சான்றிதழ் ஆகியவற்றுடன் வந்து 400 அமெரிக்க டொலர்கள் செலுத்தி இடம் ஒதுக்கமுடியும்.

கருத்தரங்கு: மு.ப. 9.30
சேர்த்துக்கொள்ளல்: பி.ப.1.30 தொடக்கம் 5.00 மணிவரை.
2002 செப். 1. ஞாயிறு
கொழும்பு ஹில்டன் ஹோட்டல்

மேலதிக விவரம்: திரு.குணவர்த்தன 01 - 811524
திரு.குணசேகர 038 - 32657, 038 - 34154, 078 - 697512.

கம்பனி செக்ரட்டேரியல் சர்விசஸ் பிரைவேட் லிமிட்டட்,
285/C - 1/1 ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை.
தொலைபேசி. 01 - 854438
ஈமெயில்: yapadd@sol.lk
(C/23323)



வாடகைக்கு

நன்றாக வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஸ்தாபனங்கள், தங்குமிட விடுதிகள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.

*தொடர்புகளுக்கு:*
சி.பரமநாதன்,
112A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.ப.நோ.கூ.சங்கம் நடுவர் பணியகம் முன்பாக)
(7639)

# சபாநாயகரின் கட்டளைகள் நாடாளுமன்றத்தில் உதாசீனம்!

## சபை 5 நிமிடங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு,ஓக.29

நாடாளுமன்ற பொதுமக்கள் பார்வையாளர் கலரியில் கடந்தவாரம் இடம்பெற்ற ஒரு சம்பவம் நேற்று முன்தினமும் நாடாளுமன்றத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சபை உறுப்பினர்கள் சபாநாயகரின் கட்டளைகளுக்குச் செவிமடுக்காமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சபையில் அமைதியை நிலைநாட்டமுடியாமல் போகவே சபாநாயகர் சபையை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டியதாயிற்று.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சிறப்புரிமைப் பிரேரணை ஒன்றை நேற்றுமுன்தினம் முற்பகல் சபையில் சமர்ப்பித்துப் பேசியதைத் தொடர்ந்தே வாக்குவாதமும் கொந்தளிப்பும் ஏற்பட்டன.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை நேற்று முன்தினம் காலை கூடிய பொழுது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சிறப்புரிமைப் பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசியதாவது:-

"கடந்த புதன்கிழமை (21ஆம் திகதி) நாடாளுமன்றத்தில் பார்வையாளர் கலரியில் இருந்தவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்மீது ஆபாசமான வார்த்தைகளைப் பிரயோகித்ததோடு பேனா, காகிதச்சுருள் என்பனவற்றையும் வீசினர். இது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடப்பட்ட ஓர் அச்சுறுத்தல் மட்டுமன்றி, சபையின் கௌரவத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட அகௌரவமாகும். இது ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களால் செய்யப்பட்டது. இது திட்டமிடப்பட்ட ஒரு செயல்."

- இவ்வாறு அவர் கூறினார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இதற்குப் பதிலளித்தார். அவர் கூறியதாவது:-

அன்று நாடாளுமன்ற கலரியில் இடம்பெற்ற சம்பவத்தை அரசிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகள் ஏன் செய்திருக்கமுடியாது? அன்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவர் பெருமளவில் தமது ஆதரவாளர்களைச் சபைக்கு அழைத்து வந்திருந்தனர். ஏன் அவர்கள் இப்படிச் செய்திருக்கமுடியாது?

- இவ்வாறு கேள்வி எழுப்பிய அமைச்சர், அன்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அழைத்து வந்திருந்த ஆதரவாளர்களின் பெயர்ப் பட்டியலையும் சபையில் சமர்ப்பித்தார்.

இச்சமயத்திலேயே ஆளுந்தரப்பினருக்கும் எதிரணியினருக்கும் இடையே பலத்த வாக்குவாதம் மூண்டது. தனது கட்டளையை உறுப்பினர்கள் ஏற்கமறுத்ததால் ஆத்திரமடைந்த சபாநாயகர் சபையை உடனே ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் சபாநாயகரிடம் மன்னிப்புக் கேட்டதோடு வருத்தமும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நாளில் சபையில் பார்வையாளர் கலரியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரிக்க நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் தமக்குத் தெரிந்த தகவல்களை அக்குழுவிடம் தெரிவிக்கலாம். நாடாளுமன்றத்தின் கௌரவத்தை தனி ஒரு மனிதரால் பாதுகாக்கமுடியாது. இச்சபையில் இருக்கும் அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெற இடமளிக்கக்கூடாது என்று சபாநாயகர் சபையில் அறிவித்தார். (ஒ)

# கிட்டு, திலீபன் நினைவாக நல்லூரில் கலையரங்கம்

## 'புலிகளின் குரல்' ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு 'புலிகளின் குரல்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் கேணல் கிட்டு, லெப்ரினன்ட் கேணல் திலீபன் நினைவு சிறப்புக் கலையரங்க நிகழ்வுகள் நல்லூர் ஆலய வீதியில் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பாக 'புலிகளின் குரல்' நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏழாண்டு கால அழுத்தங்களின் கீழான வாழ்வு மீண்டுள்ள யாழ். குடாநாட்டில் எங்கள் தாயக உணர்வுகள் ஒன்றுகலந்து எழுச்சிபெற்றுள்ள எங்கள் மண்ணில், விடுதலை வேள்வியில் ஆகுதியாகிய எங்கள் தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தில் புதிய பரிமாணத்தைப் படைத்த லெப்ரினன்ட் கேணல் திலீபன் ஆகியோரின் நினைவாக, நல்லூர்த் திருவிழாவையொட்டி, 'புலிகளின் குரல்' நிறுவனத்தால் நடத்தப்படும் கேணல் கிட்டு, லெப்ரினன்ட் கேணல் திலீபன் நினைவு சிறப்புக் கலையரங்கம், நல்லூர் வீதியில் எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை நாள்தோறும் இரவு 6.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச்சிறப்புக் கலையரங்கில் தமிழீழத் தாயகத்தின் புகழ்பெற்ற கலைஞர்கள் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார்கள் என்றுள்ளது. (ஒ)

**ஊர்காவற்றுறை, நாரந்தனையில்**

# கால்நடைகளைக் கட்டிவளர்க்க விவசாய கூட்டத்தில் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஓக.29


எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் காலபோக நெல்விதைப்பினை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருவதால் ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதிகளில் பொதுமக்கள் தமது கால்நடைகளை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிமுதல் அடுத்த வருடம் மார்ச் 31ஆம் திகதிவரை கட்டி வளர்க்குமாறு கரம்பொன் விவசாய சம்மேளனத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஊர்காவற்றுறை திரிய புஸ்பமகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற காலபோக விவசாயக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஜே/49, ஜே/50, ஜே/51, ஜே/52, ஜே/53, ஜே/54 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் ஒவ்வொரு பிடிகாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தரினால் இதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இவர்களால் பிடிக்கப்படும் மாட்டுக்குப் பிடிகூலியாக 100 ரூபாவும், பராமரிப்புக்கு நாளொன்றுக்கு 20 ரூபாவும், ஆட்டுக்கு பிடிகூலியாக 50 ரூபாவும், பராமரிப்புக்கு நாளொன்றுக்கு 10 ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிர்செய்கை மேற்கொள்ளப்படும் காணியிலிருந்து 100 மீற்றர் தூரத்தினுள் வைத்து இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகள் விவசாய சம்மேளன அலுவலகத்தில் பிடிகாரர்களினால் கட்டப்படும் அதேவேளை, குறிப்பிட்ட நாள்களில் உரிமைகோரப்படாத கால்நடைகள் ஏலத்தில் விற்கப்படும் எனவும் - கட்டாக்காலிகளினால் ஏற்படும் சேதம் குறித்து அப்பகுதி கிராம சேவை அலுவலர், விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளர் மதிப்பீடை மேற்கொள்வர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-16)



# சாயி சிந்தனை

## தேகமெனும் கோயில்

கடவுளின் சிருஷ்டியில் எதுவும் கெடுதல் கிடையாது. எல்லாமே புனிதமானவை: முழுமையான காந்தசக்தி நிறைந்தவை. தேகம் என்பது ஒரு கோயில். காந்தசக்தி நிறைந்த கோயில். ஆகவே, நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் அது புனிதமானதாக இருக்கவேண்டும். நீங்கள் அதர்மமான செயல்புரியும்போது நீங்கள் அதற்கான விளைவைச் சந்தித்தே தீரவேண்டும். ஜபம், தியானம் போன்ற ஆன்மீக சாதனைகள் வெறும் மனத்திருப்தியைட் மட்டும் அளிக்கக்கூடியவை. அவற்றால் உங்களிடம் நிறைந்திருக்கும் காந்தசக்தியை வெளிப்படுத்தமுடியாது. கோயில்கள் எல்லாம் காந்தசக்தியின் இருப்பிடங்கள். ஒரு கோயிலில் நீங்கள் எந்த சக்தியை அனுபவித்தாலும், அது அங்கு நிறைந்திருக்கும். திருப்பதி ஆலயத்தில் அதிக சக்தி இருப்பதாக நினைக்கிறீர்கள். அது வெங்கடஜலபதியின் மகிமை மட்டுமல்ல, அங்குவரும் பக்தர்களின் நம்பிக்கையாலும் சரணாகதியாலும்தான் அது சாத்தியமாகிறது. ஆகவே அங்கு அளவுக்கதிகமான காந்தசக்தி இருக்கிறது.

எந்தக் கோயிலை எடுத்துக்கொண்டாலும் அங்கு நிறைந்திருப்பது காந்தசக்தியே! அதுவே தெய்வீகத்தின் சக்தி. இவற்றை கோயில்களில் தான் அனுபவிக்கமுடியும். கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் விக்கிரகங்கள், அவற்றிற்கு அபிஷேகம் செய்யும் பொருள்கள், சூடப்படும் புஷ்பங்கள், மஞ்சள் அட்சதைபோன்ற எல்லாவற்றிலுமே காந்தசக்தி உள்ளது. நமது தேகமும் காந்தசக்தி நிறைந்த ஒரு கோயில் போன்றது தான். ஆகவே, நமது தேகம் புனித செயல்களுக்காகப் பயன்படுத்துப் படவேண்டும்.

*(ஆதாரம்:சனாதனசாரதி)*

# 51 பாகிஸ்தானியர் இலங்கையில் கைது!

கொழும்பு,ஓக.29

இலங்கையூடாக இத்தாலி செல்ல முயன்ற 51 பாகிஸ்தானியர்களை இலங்கைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் பாகிஸ்தானிலிருந்து படகுகள்மூலம் வந்து சட்டவிரோதமாகக் காலிப் பகுதியில் தரையிறங்கியதாகவும் -

அங்கு தங்கியிருந்துவிட்டுப் பின்னர் இத்தாலி செல்ல முயன்ற வேளையிலேயே பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

# இழப்பீட்டுப் படிவம் விநியோகம்

தென்மராட்சி,ஓக.29

தென்மராட்சி பிரதேசத்தில் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய ஓய்வூதியர் மற்றும் வர்த்தகர்கள் உட்பட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு உடைமைகள், வீடுகள் சேதமடைந்ததற்கான இழப்பீட்டு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் படிவத்தினைப் பெற்றுப் பூர்த்திசெய்து காணி உறுதி, பொலீஸ் முறைப்பாட்டு அறிக்கை ஆகியவற்றின் புகைப்படப் பிரதிகள் ஆகியவற்றுடன் இணைத்து வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1?7)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(17ஆம் திருவிழா)



## அனுதினம் சொல்லுவோம்!

வெற்றி வேல் கொண்ட வேலவனே!
வெவ்வினை தீர்த்திடும் எங்களின் காவலனே!
அற்றிட வைத்திடு எங்களின் துயரினை!
அனுதினம் சொல்லுவோம் உந்தன் பெயரினை!

- த.அஜந்தகுமார்
*யா/நெ.ம.ம.வி.*

## குழந்தையாகி நிற்கும் குமரா

பிள்ளையின்றி யெமக்கருளப் பாரில்
பிள்ளையாக நிற்கும் முருகா
கள்ளமில்லாக் குணமும் மிக்கநல்ல
கனிந்த மொழியும் மாசகற்றி
உள்ளத்தில் உள்ளொளியும் என்றும்
உன்னைமறவாத அன்பும் வைத்துன்தன்
பிள்ளையென என்னைக் கொண்டிடுவாய்
பிறப்பெடுத்த பயனை நான் பெற்றிடவே

- நா.நவராஜ்
*கொழும்புத்துறை*

## உன் எழில் காண அருள்செய்வாய்

*குன்றுதோறாடிவந்து குறை தீர்க்கும் குமரையா!*
*நன்று நீ நல்லையிலே மயில் மீது அமர் காட்சி*
*அன்று தொட்டு நாம் கண்ட அல்லல் தீர்த்தருள்வாய்*
*மன்று வைத்து வாதாட நாதியற்ற இனமானோம்.*
*தொன்று தொட்டு நீ தந்த நல்லையின் அருளாட்சி*
*பொன்றும் நிலை போக்கி காத்தருள வேண்டுமய்யா*
*இன்றுபோல் உன் எழிலை உவகையுடன் காண்பதற்கு*
*என்றுமே அருள் செய்வாய் எழில் வள்ளி மணவாளா.*

- பதும முகுந்தன்

## நீதியுடன் ஒரு தீர்வு: அளித்திடாயோ நல்லூர்க் கந்தா!

நல்லை நகர் வீற்றிருக்கும்
நல்லைக் கந்தா நீயே
நாளும் நம்மைக் காத்திடனும்
நம் நல்லூர்க் குமரா!

அன்பிற்கு நிகர்தான் ஏது?
அவனியில் வாழ்வோர்க்கும் இங்கே
அது ஒன்றே இம்மண்ணில் நிலைக்க
அருள் அதுவாய் அளிப்பாயா ஆறுமுகன் நீயே!

நிலைகொண்ட சமாதானம் நிலைத்திடனும்
நிம்மதியும் எம் வாழ்வில் தழைத்திடவே
நீதியுடன் ஒரு தீர்வு நமக்கெனவே
நிரந்தரமாய் அளித்திடாயோ நல்லூர்க் கந்தா!

- தங்கத்தமிழன்

## வந்திடு அமைதியோங்க

செந்தமிழ் போற்றும் செவ்வேள்
சேகதலம் போற்றும் நல்லைக்
கந்தனே கலியுகத்தில்
சூழ்ந்திடு பகைமையெல்லாம்
சுந்தர ஈழந் தன்னில்
நீங்கிட பவனி வாரீர்.
சொந்த எம் மண்ணில் என்றும்
சுதந்திரம் வேண்டும்! வேண்டும்!!

விண்ணவர் உலகங்காந்த
வெற்புறை மயிலெ வாகனனே!
தண்ணொளி வீசும் ஆறு
முகத்துடை முருகா போற்றி
மண்ணவர் குறைகள் தீர்க்க
மாட நல் வீதி தன்னில்
பண்மிசை பலவினோடு
வந்திடு, அமைதியோங்க!

- வரணியூர் T.K.குணரட்ணம்

## கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலைக்கெனப் புதிதாக அமைக்கப்பட்டுவந்த கட்டட வேலைகள் போர்க்காலச் சூழலைக் காரணம் காட்டி இடைநிறுத்தப்பட்டிருந்தன.

குறித்த கட்டடத்தைக் கட்டிப் பூர்த்தியாக்குவதற்கென கல்வித் திணைக்களம் வழங்கிய 12 லட்சம் ரூபாவைப் பயன்படுத்தி மிகுதிவேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-70)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு

# நெருக்கடி வேளைகளிலும் உதவியது இலங்கை வங்கி

யாழ்ப்பாணம்,ஓக.29

திறமைமிக்க செயன்முறைகள் மூலம் நீண்டதொரு சேவையை ஆற்றி வரும் இலங்கை வங்கி, பாராட்டுதற்குரியது. யாழ்.குடாநாட்டில் மிகவும் நெருக்கடியான காலங்களில்கூட இலங்கை வங்கி சளைக்காமல் செயற்பட்டு பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இவ்வாறு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்றரக் கிளையின் 63 வருட சேவை நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

63 வருடங்கள் ஒருவங்கி தனது சேவையை நிறைவாகச் செய்துவருவது ஓர் இலகுவான விடயம் அல்ல. குறிபாக யாழ் குடாநாட்டிலும் அதன் பணி சிறப்பானது. தொடர்ந்து பல புதிய சேவைகளை இலங்கை வங்கி யாழ். மக்களுக்கு வழங்கும் - என்றார்.

வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.விக்னராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட முகாமையாளர் என்.நடராஜலிங்கம், வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

வங்கி அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-8)

## கட்டுநிதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஓக.29

உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான கட்டுநிதி யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளது.

2002 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய கட்டுநிதியான 7 லட்சத்து 36 ஆயிரம் ரூபாவே இவ்வாறு வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

தமது திணைக்களத்திற்குக் கிடைத்த மேற்படி நிதி மிக விரைவில் யாழ்குடா நாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-ரி)

## சுகாதார பரிசோதகர் 11 பேர் நியமனம்

சண்டிலிப்பாய்,ஓக.29

ஒன்றரை வருடகால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து, இறுதிப் பரீட்சையில் சித்திபெற்ற பதினொரு பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு யாழ். மாவட்டத்தில் சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தினால் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாதிருக்கும் பொது சுகாதார பரிசோதகர் பதவி வெற்றிடங்களுக்கு யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் இவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (எ-135)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 07 - 07 - 1969 | 29 - 08 - 1996 |



## செல்வி சின்னத்தம்பி தேவமலர் (வவா)

திதி: 29.08.2002

எம் இனிய வவாவே! நீ இப்பாரினில் உன் செயலால், குணத்தால், நடத்தையால், செயற்றிறனால் எல்லோரையும் மனமாரக் கவர்ந்து வழி நடத்தி இன்பவாழ்வு வாழும் வேளையில் பொல்லாத காலன் உன் உயிரைப் பறித்து, இன்று ஆறாவது ஆண்டை நினைவு கூருகின்றோம்.

*பிரிவால் துயருறும்:*

அம்மா, அத்தான், அக்காமார், அண்ணன்மார், அண்ணிமார், தங்கச்சி, தம்பிமார், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.* (7654)

தகவல்:
சின்னத்தம்பி மனோகரன்.


# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

நடத்தும்

T.R.R.O-CTC

பிரவாகம் - IV

## இலவச கணனிப் பயிற்சி நெறி

- *Diploma in Microsoft Office*
- *Diploma in Desktop Publishing*
- *Pagemaker*
- *Corel Draw*
- *Visual Basic*

போன்ற பயிற்சிநெறிகள் 21.09.2002 அன்று ஆரம்பமாகவுள்ளன!

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது தேசத்தில் "சகலருக்கும் கணனிக்கல்வி" கிடைக்க வழி சமைக்க முயற்சிக்கின்றோம்.

★ பதிவுக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

★ விண்ணப்ப முடிவு திகதி - 10.09.2002

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள:-

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (C/23351)

கணனிப் பயிற்சி நிலையம்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
(Mc Leod Hospital)
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.



# RAMCO CEMENT
# ராம்கோ சீமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்யப்பட்ட
ராம்கோ RAMCO சீமெந்து (கோபுர மார்க்)
விற்பனைக்கு வந்துவிட்டது!

☆தேவையான நிறுவனங்கள் உடன் தொடர்புகொள்ளவும். முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு இலவசமாக லொறிமூலம் விநியோகம் செய்யப்படும்.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதி நிறுவனம்:

## ஈஸ்வரபகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/23350) *T.P:021 - 2350*


## பொது அமைப்புக்களின் கலந்துரையாடல்

சங்கானை.ஓக.29

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் விஷேட கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் தவறாது அதில் கலந்துகொள்ளுமாறு ஒன்றியத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஓ)


# LONDON னில் உயர்கல்வி வாய்ப்பு

Sept. 2002 Feb. 2003 அனுமதிகள்

INFORMATION TECHNOLOGY, ACCOUNTING AND FINANCE, E-COMMERCE, ARTS AND SCIENCE

ஆகிய துறைகளில் பட்டப்படிப்பும் பட்டப்பின் படிப்பும்

University of East London பல்கலைக்கழகத்தின் கல்வி ஆலோசகர் யாழ்ப்பாணத்தில் மாணவர்களைத் தகுதி கண்டு அனுமதி பெற்றுக்கொடுப்பார். அத்துடன் VISA ஆலோசனைகளும் வழங்கப்படும்.

ஆலோசனை நேரம்:- காலை 9.00 - 12.00
மாலை 4.00 - 6.00

*தொடர்பு:* இல. 06, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை (பிள்ளையார் கோயிலுக்குமுன்),
யாழ்ப்பாணம்.
T.P. - 021-3318 (7658)

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.


# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் மகாலிங்கம்

(மண்டைதீவு)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கம் நேற்று (28.08.2002) புதன்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் - நாகம்மா தம்பதிகளின் (மல்லாகம்) அன்பு மகனும் பஞ்சாட்சரம் - பரமேஸ்வரி தம்பதிகளின் (கனடா) அன்பு மருமகனும் உமாசங்கர், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேவதியின் அன்பு மாமனாரும் பவளம்மா, மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2002) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

*7ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.* (7652)

தகவல்:
ம.உமாசங்கர்
(மகன்)

## பொன்னையா மிருகண்டர்

(நகரசபை - சாவகச்சேரி)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா மிருகண்டர் நேற்று (28.08.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் மகேஸ்வரி (பிரதேசசெயலகம், பளை) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி வேலாயுதபிள்ளை மங்கையற்கரசி, காலஞ்சென்ற மயில்வாகனம், சுவாமிநாதன் (இந்தியா), தங்கேஸ்வரி, கேதாரேஸ்வரி, குலராஜசிங்கம் (அரசினர் வைத்தியசாலை, வரணி), திருமதி கமலேஸ்வரி சந்திரராசா (வட்டக்கச்சி), திருமதி ஜெகதீஸ்வரி சற்குணரத்தினம் (மகாவித்தியாலயம், வரணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது மீசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*(மீசாலை விக்கினேஸ்வரா பாடசாலை அருகில்)*
*மீசாலை.* (7656)

தகவல்:
மி.மகேஸ்வரி
(மனைவி)

## ஸ்ரீமதி நடனலட்சுமி சுப்பிரமணியம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடனலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (28.08.2002) புதன்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி (இந்தியா), பாக்கியலட்சுமி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, கிருஸ்ணேஸ்வரி, ரவீந்திரநாதன் (இலங்கை மின்சார சபை ஊழியர்), கேசவராணி (சம்பந்தன் வைத்திய நிலையம்), லோகேந்திரன் (நோர்வே), லோகேஸ்வரி (லண்டன்), குணேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்லத்துரை, காலஞ்சென்ற பரமநாதன் புஸ்பராணி (யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), பத்மாவதி (நோர்வே), ரகுநாத் (லண்டன்), சசிதா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் கமலினி (ஜேர்மனி), சாந்தி (இந்தியா), மனோராஜ் (லண்டன்), கண்ணன் (பிரான்ஸ்), றஜி (டென்மார்க்), உதயணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும் சங்கர் (நோர்வே), சுமதி (லண்டன்), ரூபமதி, றமேஷ் (லண்டன்), லவண்யா (லண்டன்), மோகன்ஜீத், கரன்ஜீத், பாலினி, நித்தியகலா, நிஷா, அபிராமி, ஓம்கார், விஷ்ணு, லக்ஷனா, லக்ஸ்மன், யதுமன், காரணியா, சஞ்சியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*761,நாவலர் வீதி,*
*நாவலர் சந்தி,*
*யாழ்ப்பாணம்.* (7655)

தகவல்:
சு.ரவீந்திரநாதன்.
(மகன்).

### தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி,ஓக.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் அடுத்த மாதம் 4ஆம் திகதி பிப.2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)


## முதலாம் வருட நினைவு அஞ்சலி



மலர்வு 20.02.1926 உதிர்வு 09.09.2001

அமரர்

**தாமோதரம் விநாயகமூர்த்தி**

(வேதம்)

*(முன்னாள் பிரதம லிகிதர், வ.வ.பிரதேச செயலகம்)*

அன்போடு அரவணைத்து ஆதரித்து
வளர்த்த அப்பாவே!
உங்களோடு வாழ்ந்த நாள்கள்
மறக்க முடியாதவை!
எங்களைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீரோ?
உங்களை நினைத்தபடியே நாங்கள்
இங்கு வாழ்கின்றோம்!

அன்பு மனைவியும்,
அருமைப் பிள்ளைகளும்,
மருமகளும்.

*புலோலி,*
*பருத்தித்துறை.* (7651)



UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF GRADUATE STUDIES**

**FIRST SEMESTER EXAMINATION**

**POST- GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION**

Further to our Advertisement dated 2002-08-28, on the above subject. The above examination will commence on 14th September, 2002 and not on 2002.09.02.

**Registrar.**
**2002-08-28** (C/23348)



## சேவை நலன் பாராட்டு

**திரு. இலங்கையர் கணேசன்**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்)



கைதடியில் அவதரித்து கல்வியோடு அலைமோதி
களிகொண்ட தென்மராட்சி உயர்வு
கண்ட இன்பமது
கவிதனில் வரி எடுத்து தரணியில் புகழ்பாட
நம் வித்தியாலயந்தனில் அதிபர் சேவையினை
நலமுடன் ஆரம்பித்து
பிரதிக்கல்விப் பணிப்பாளர் பணிதனில் தனித்துவம்
மிக்கவரை
தன்னலங்கருதா சேவையாளனை செழிப்பிற்கு
வழிகாட்டிய செம்மலை
வாயார வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு!

**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.**
(7645)

அதிபர்,
ஆசிரியர்கள்.



## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 1970-08-29

உதிர்வு 1992-08-29

**செல்வன் பாக்கியதுரை உதயகுமார்**

**(உதயன்)**

*பகலோடு இரவாக பத்தாண்டு பறந்தன*
*பாசமுள்ள உந்தன் பால்முகம் என்றும் எம்முள்*
*நிஜத்தோடு நிழலாக, நினைவோடு சுமையாக*
*எம் நெஞ்சுள்ளே கைதியாக...... நீ வாழ்வாய்*
*உதயமான உன் வாழ்வை உதிரவைத்து*
*புன்னகை புரிந்த சதியை*
*மன்னிக்குமா சத்தியம்?*
*வாழ்வரும் வசந்த நாளெல்லாம்*
*வாடுகின்றோம் உனை நினைந்து*
*வந்துவிடு உதயா எம்முடன் நீயும்!*
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

நீங்காத நினைவோடு
**குடும்பத்தினர்.**

*Chennai - 45,*
*Tamilnadu.* (7647)


### இளவாலைப் பகுதி வீடுகளுக்கு

# மின்மானி பொருத்துமாறு பாவனையாளர் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.29

இளவாலைப் பகுதியிலுள்ள மின் பாவனையாளர்கள் பலரின் வீடுகளுக்கு இதுவரை மின்மானி பொருத்தப்படவில்லை என்றும் - இதனால் இப்பகுதி மின் பாவனையாளர்கள் மிகவும் அதிகரித்த மின் கட்டணத்தை மாதாந்தம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் - புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தங்கள் வீடுகளுக்கு விரைவில் மின்மானி பொருத்துவதற்கு மின்சார சபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இவர்கள் மின்சார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இளவாலைப் பகுதிக்கு தனியான ஜெனரேற்றர் ஒன்றின் மூலம் தினமும் காலையில் 5மணிமுதல் 7மணி வரையும் இரவில் 7மணிமுதல் இரவு 11 மணிவரையும் கடந்த பல வருட காலமாக மின் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - இப்பகுதி மக்கள் தமக்கு ஏனைய இடங்களுக்கு வழங்கப்பட்டு வருவதைப்போல 24மணி நேர மின்சாரத்தை வழங்கி உதவுமாறும் மின்சார சபையினரிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-135)

### நாவலர் வீதியை திருத்தாவிட்டால் மறியற்போராம்!

யாழ்ப்பாணம்,ஓக.29

அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.நாவலர் வீதி திருத்தப்படாவிட்டால் அந்த வீதியைத் திருத்தக்கோரி யாழ்.மாநகரசபை அலுவலகத்தின் முன்பாக மறியற்போராட்டம் நடத்தப்போவதாக அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருக்கு அக்கழகம் முன்னறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. (ஒ)

### பசுமாடுகள் ஏலத்தில்

தென்மராட்சி,ஓக.29

சாவகச்சேரி நீதிமன்றில் தாககல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றின் சான்றுப்பொருள்களாகச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றரை வயது மதிக்கத்தக்க பசுமாடும், ஏழரை மாதம் மதிக்கத்தக்க பசுக்கன்றும் (நாகு) ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

செப்ரெம்பர் நான்காம் திகதி பகல் 11.00 மணிக்கு பருத்தித்துறை வதிரியில் உள்ள சாவகச்சேரி நீதிமன்ற வளவில் வைத்து இவை பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் வீகே.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (எ-117)

### மாதகல் மாணவருக்கு உடுபுடவை கிடைக்கும்!

மாதகல் கல்வி அபிவிருத்திச் சபையினரை மாதகல் பகுதியிலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட வசதி குறைந்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு உடுபுடவைகள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடா நாட்டில் இயங்கிவரும் மாதகல் - கனடா நலன்புரிச் சங்கம் அண்மையில் மாதகல் கல்வி அபிவிருத்தி சபைக்கு வழங்கிய நிதியைக் கொண்டு இந்த உடுபுடவைகளும் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக சபையின் தலைவரும், மாதகல் நுணசை வித்தியாலய அதிபருமான வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை - வசதி குறைந்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு விஞ்ஞான, கணித பாடங்களுக்கான வகுப்புகளும் இலவசமாக நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### 36ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் இருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 36 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசிங்கம் பத்மாவதி என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 4ஆயிரம் ரூபா தர்மப்பணமும்.

யாழ்ப்பாணம், ஐந்து சந்தியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இரத்தினேஸ்வரி என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (எ-10)

### ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் தெற்கு,ஓக.29

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் பரீட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் ஏற்கனவே விடைத்தாள் பரீட்சகர் குழுவில் கடமையாற்றியவர்களின் விவரங்களும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

விண்ணப்பங்களுக்குரிய மாதிரிப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை சிபார்சு செய்து செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களிடம் பரீட்சைத் திணைக்களம் கேட்டுள்ளது. (எ-152)


## எம் இனியவர் மறைந்து 5ஆவது ஆண்டு

தோற்றம் 07 - 07 - 1944



மறைவு 29 - 08 - 1997

**அமரர் சு.கி.மனோகரபூபன்**

(நிர்வாகப் பங்காளர் - மனோகரன் அன் வெற்றிவேல்)

*ஓடி மறைந்திட்ட*
*எம் இனியவரில்லா ஐந்தாண்டுகள்*
*காலங்கள் கடந்தபின்னும்*
*கண்களில் இன்னும் ஈரம்*
*உயிர்ப்பற்ற வாழ்க்கை*
*ஆயினும்.*
*உறுதுணையாய் உம் கனவுகள்*
*உறுதியுடன் நடக்கின்றோம்.*
*உம் விருப்பிங்கு நனவாக*
*நிச்சயம் ஒருநாள்*
*உம் கனவுகள் இங்கு கால் பரப்பும்.*
*தமிழ் மண்ணில்*
*நல்விருட்சமாய் விரிந்தெழும்பும்*
*இனியவரே*
*எமக்கு ஆசிதாரும்*
*உம் கனவுகளை நனவாக்கும்*
*வல்லமை தாரும்!*

அன்பு மனைவி: கருணா,
பிள்ளைகள்:
வீணா, கிருஷ்ணவேணி (கிட்டு),
மருமகன்: பிரகாஷ்.

*49A, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (7623)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர்

திருமதி இராஜேஸ்வரி செல்வராசா அவர்களின் அன்புத் துணைவர்

**கந்தையா செல்வராசா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.

*ஏழாலை.* (7642)



## மரண அறிவித்தல்

### மகாராஜா மகாசெபம்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவீடனை வசிப்பிடமாகவும் கொண்ட மகாராஜா மகாசெபம் அவர்கள் 25.08.2002 ஞாயிற்றுக்கிழமை நுணாவிலில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மகாராஜா (மகான் மாஸ்ரர்), நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகாசிவம் (பொறியியலாளர் - கொழும்பு), மகாஜெயம் (சுவீடன்), திருமதி மகாரஞ்சிதம் (கனடா), காலஞ்சென்ற மகாசெல்வம், மகாருஷம் (கனடா), மகாபுஸ்பம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி சிவதேவி மகாசிவம் (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), திருமதி பானு மகாஜெயம் (சுவீடன்), S.தீலீப்குமார் (கனடா), திருமதி சுபாசினி மகாருஷம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சர்மிளா, மாதங்கி, ஜெயாசினி ஆகியோரின் சித்தப்பாவும், விதுஷா, அனற்றன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணாவில் மேற்கு வ.திருமுருகராஜா (வ.பி.போ.ச., பருத்தித்துறை சாலை) இல்லத்தில் இன்று (29.08.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தான்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கௌரிசர்"*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

தகவல்:
ம.மகாசிவம் *(சகோதரன்)* (7646)

## விற்பனைக்கு

றெஜிபோம் பெட்டிகள், றெஜிபோம் மட்டைகள் சகல அளவுகளிலும் வெங்காயம், மரக்கறி பொதிசெய்யும் வலை Bag (நெற்) மற்றும் நல்லநிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம், மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர் ரைகர் - KV650), 1000 லீற்றர் நீர் கொள்கலன் என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*

லவநாதன் அன் சகோதரர்கள்,
122A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.பல நோ.கூ. சங்க நடுவப் பணியகம் முன்பாக) (7638)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 04 - 1956 | 31 - 07 - 2002 |



### அமரர் மரியநாயகம் யோகநாதன்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த
உங்கள் அன்பு முகத்தை மறக்கவே மாட்டோம்.
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (30.08.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (7641)

உங்கள் நினைவுகளில் வாழ்ந்திடும்:
மனைவி, பிள்ளைகள்.

## உதவிப்பொருள் விநியோகம்

வன்னியிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் குடியமர்ந்துவரும் குடும்பங்களுக்கு அறவழி நிலையத்தினர் உணவுப் பொருள்கள் அல்லாத பொருள்களை கைதடி நுணாவிலில் உள்ள அறவழி நிலையத்தில் வைத்து வழங்கிவருகின்றனர்.

சமையல் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வாளி, பாய், சவர்க்காரம் ஆகியவையே இவ்வாறு வழங்கப்படுகின்றன.

1995ஆம், 1996 ஆம் ஆண்டுகளில் வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கே உதவிப்பொருள்கள் வழங்கப்படுகின்றன. (எ-117)

## செயன்முறைப் பரீட்சைகள்

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பயிற்சிகளில் கலந்து கொண்ட அபிவிருத்தி பயிற்சியாளர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாளும் காலை 9.30 மணிதொடக்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் -

முதலாம் கட்டத்தில் பயிற்சி பெற்ற அபிவிருத்தி பயிற்சியாளர்கள் இதில் தவறாது கலந்துகொள்ள வேணடும் என்றும் - பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (எ-117)

## அதிபர் நியமனம்

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தின் அதிபராக திருமதி ஜெ. தேவேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி தொடக்கம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-117)

# மின்பொருள்கள் செயலிழந்தன.

மின் அழுத்தம் காரணமாக வடமராட்சிப் பகுதியில் மின்பாவனைப் பொருள்கள் பலவும் செயலிழந்தன. நேற்று நண்பகல் அளவில் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கரணவாய் தூதாவளைப் பகுதியில் திடீரென ஏற்பட்ட உயர் மின் அழுத்தம் காரணமாகவே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தொலைக்காட்சிப் பெட்டிகள், 'டிஸ் அன்ரனா'க்கள் உட்பட மின்பாவனைப் பொருள்கள் பலவும் செயலிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய
மகிமை உன்மேல் காணப்படும். *ஏசாயா 60:2*

எமது அன்புக்குரிய சகோதரியான

**திருமதி றெஜினா ஜெயசீலன்** அவர்கள்

அகவை ஐம்பதினில் அன்பர் இயேசுவின் ஆசியுடன்
நலமுடன், வளமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

எபனேசர் ஜெப ஆலயம்,
வட்டுக்கோட்டை. (7636)

போதகர்கள், ஊழியர்கள்,
விசுவாசிகள்.

## இடம்மாற்றம்

ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலையில் இயங்கிவந்த **துர்க்கை அம்பாள் புத்தகசாலை** (பழைய பெயர் ஆசீர்வாதம் புத்தகசாலை) 21.08.2002 தொடக்கம் சாவகச்சேரி, தனங்களப்பு வீதியிலுள்ள பள்ளிவாசற் கட்டடத்தில் பழைய இடத்தில் இயங்குகிறது. இப்போது இங்கே வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

*இல.23, தனங்களப்பு வீதி,*
*சாவகச்சேரி.* (C/23326)

- உரிமையாளர்.


# கிராமத்துக்கு கிராமம் ராஜ பவனி வருகிறது




**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:

- 1748, கட்டுகஸ்த்தோட்டைவீதி, கண்டி. தொ.பே: 08-226146 பக்ஸ்: 08-238134
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே: 027 50037 பக்ஸ்: 027-50222
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே: 041-28488 பக்ஸ்: 041-27488
- நீகல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-22997 பக்ஸ்: 063-23662
- 31 பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ.பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
- தனசிரி கட்டிடம், இல.195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ.பே/பக்ஸ்: 045-22389
- இல.116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ.பே/பக்ஸ்: 032-65527

*இன்றைய காலத்தின் குடும்ப வாகனம்* பஜாஜ்

விலை ரூ. 191,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

Tradlanka

# தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்கள்
# மலையக மக்களின் அரசியல் பிரச்சினை
# உலக அரங்கில் ஒலிக்க அரிய சந்தர்ப்பம்
## சரியாகப் பயன்படுத்த அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் மலையக மக்களின் அரசியல் பிரச்சினையை உலக அரங்கத்துக்குக் கொண்டு செல்வதற்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பமாகும் என்று சமூக அபிவிருத்தி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ.சந்திரசேகரன் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கால் நூற்றாண்டாக மலையகத் தலைமைகள் இரு அரசாங்கங்களிலும் அமைச்சர் அந்தஸ்தோடு இருந்துவந்த போதிலும் மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆரம்பப் பேச்சுக்கள் கூட காத்திரமாக நடைபெறவில்லை எனவும் இலங்கையிலேயே இப்பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துவிடமுடியும் என்று கூறுவது பாமரத்தனமான சிந்தனையாகும் எனவும் அவர் அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார். அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஆழமான அரசியல் சிந்தனையோடு இக்காலகட்டத்தை மலையகத் தலைவர்கள் பயன்படுத்தாவிட்டால் மாபெரும் வரலாற்றுத் தவறைச் செய்த குற்றச்சாட்டிலிருந்து தப்பவே முடியாது.

எனவே, போலி வீராப்புப் பேசாமல் சகல மலையக அமைப்புகளும் ஒன்றிணைந்து இக்காலகட்டத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்று மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது. (ம)

## நயினை - நல்லூர்
# பஜனைப் பாதயாத்திரை இம்முறையும் வழமைபோல்

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு சப்த தீவக திவ்ய ஜீவன சங்கத்தினால் வருடம் தோறும் நடத்தப்படும் பஜனைப் பாதயாத்திரை இம்முறையும் வழமை போல் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளை அடுத்து வேலுடன் பஜனை பாதயாத்திரை நல்லூர் நோக்கிப் புறப்படும்.

அன்றையதினம் குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி ஆலயத்தில் காலை வழிபாட்டில் ஈடுபடும் பாதயாத்திரைக் குழுவினர் தொடர்ந்து புங்குடுதீவு அரியநாயகன்புலம் விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசைகளில் கலந்துகொள்வர். பின்னர் சிராஞ்சி பகுதியிலுள்ள ஆலயங்களைத் தரிசித்த பின்னர் இவர்கள் அன்றிரவு சிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தங்குவர்.

மறுநாள் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு மடத்துவெளி விநாயகர் ஆலயம், வேலணைத் துறையிலுள்ள ஆலயங்கள் மற்றும் வேலணை வங்களாவடி முருகன் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்து, பின்னர் அன்றைய தினம் வேலணை குளங்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தங்கி நிற்பர்.

அடுத்தநாள் 4ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை சாட்டி, செட்டிப்புலம், மண்கும்பான் வழியாக அல்லைப்பிட்டி முருகன் ஆலயம் ஆகியவற்றில் இடம்பெறும் பூசை வழிபாட்டில் இக்குழுவினர் பங்குகொள்வர். பின்னர் மண்டைதீவு, பண்ணை கோட்டை வீதி ஊடாக அன்று மாலை யாழ்.சத்திரத்துச்சந்தி ஞானவைரவர் ஆலயத்தை பாதயாத்திரை வந்தடையும்.

சத்திரத்துச் சந்தி ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம் சென்று அங்கு இரவு தங்கி நிற்கும் பாதயாத்திரைக் குழுவினர் மறுநாள் 5ஆம் திகதி வியாழக்கிழமை புறப்பட்டு கந்தர்மடம் சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலயம், நல்லை ஆதீனம் அதனைத் தொடர்ந்து நல்லைக் கந்தன் ஆலயத்தை பஜனைக் குழுவினர் வந்தடைவர். (எ-ரி)

## கண்டெடுக்கப்பட்ட அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.ஆஸ்பத்திரி வளவினுள் கண்டெடுக்கப்பட்ட விஜயராணி ஈஸ்வரன் என்பவரின் தேசிய, விசேட அடையாள அட்டைகள் தமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சமுகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## அரையாண்டு பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன இறுதி வருட மாணவர்களுக்கான அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளதென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ-ரி)

## பொருண்மியப் பிரிவின் 'பசுமை' நூல் வெளியீடு

மட்டக்களப்பு,ஓக.29

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவின் 'பசுமை' சஞ்சிகை எதிர்வரும் முதலாம் திகதி வெளி யிட்டு வைக்கப்படும்.

மட்டக்களப்பு கோயில் போரைத்தீவு விக்கினேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் முதலாம் திகதி பிற்பகல் 2.30மணிக்கு இவ்விழா நடைபெறவுள்ளது.

புலிகளின் ஏற்பாட்டில் நடக்கும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் நிசாம், அரசியல் பொறுப்பாளர் கௌசிகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பல்வேறு திணைக்களங்களின் புத்திஜீவிகள் மற்றும் முக்கிய போராளிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-12)

## பளையில் கடும்வரட்சி

பளைப் பிரதேசத்தில் கடும்வரட்சி நிலவுகிறது. கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இப்பிரதேசத்தில் மழை பெய்யாததால் இங்குள்ள குளங்கள் அனைத்தும் வரண்டுபோய்க் காணப்படுகிறன.

கடும் வரட்சியினால் இப்பகுதி தென்னை மரங்களிலிருந்து குரும்பைகள் காய்ந்து விழுவதாகவும் -

புதிதாக உருவாகும் தென்னம் பாளைகளும் கருகிக் காணப்படுகின்றன.

எரிந்த நிலையில் காணப்படும் தென்னை மரங்களும் வாடி அழிந்து போகும் அபாயம் காணப்படுவதாகக் கூறப்பட்டது. (எ-117)

## நல்லைக்கந்தன் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் விவரம் வருமாறு:

★ அகில இலங்கை கம்பன் கழகத்தால் கம்பன் கோட்டத்தில் இன்று 6மணிக்கு நடத்தப்படும் தெய்வீக சொற்பொழிவில் "பெண்பாற் புலவர்கள்" என்ற தலைப்பில் எஸ்.சிறீதரனின் உரை.

★ துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6 மணிக்கு ஏ.கே.கருணாகரனின் பாட்டுக் கச்சேரி. வயலின் - சியாமளாங்கி கருணாகரன், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா - கே.அனந்தகோபன், முகர்சிங் - வீரமணன்.

★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை திருமுறை வீதிப் பஜனையும் குருமூர்த்த ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9 மணிக்கு சமயதீட்சை வழங்கப்படும் தொடர்ந்து புராணபடனம்.

★ வடபிராந்திய இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச் சொற்பொழிவில் "[illegible]தியை வென்ற சன்மார்க்கம்" என்ற தலைப்பில் தர்மதீபம் தவத்திரு ப.சிவலோகநாதனின் உரை.

★ நல்லூர் சைவ மகாசபையினரால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் மாலை 5.45 மணிக்கு "மகாசூரன் வதம்" என்ற தலைப்பில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் கதாப்பிரசங்கம். (ம-ரி)


ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ரஜனிகாந் மனிஷா கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர் இரவு 9.30மணிக் காட்சி காண்பிக்கப்படுகின்றது.
ஏனைய காட்சிகளும் வெட்டப்படாமல் காண்பிக்கப்படுகின்றன.
(C-23125)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், பிரியாகில் நடித்த
ரெட் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (புதியநேரம்)

லக்ஷ்மி இணுவில்
அர்ஜுன், சாக்ஷி, செந்தில், வினீத், திவ்யா, கவுண்டமணி நடித்த
வேதம் (ரீலஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
(7634)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடிக்க
குஷி (ரீலைஸ்)
தினசரி : 11.00, 3.00
30முதல் உன்னை நினைத்து

ACE INTERNATIONAL RECRUITMENT CONSULTANTS
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (PVT) LTD.

அரபு நாடுகளுக்கான பின்வரும் வெற்றிடங்கள் உண்டு

| தொழில் | சம்பளம் |
|---|---|
| LABOURERS (தொழிலாளி) | 700 DHS |
| Ass. Manager (உதவி முகாமையாளர்) | 1500 QR |
| SUPERVISOR (பரிசோதகர்) | 1000 QR |
| LAUNDRY MANAGER | 1000 QR |
| LAUNDRY WORKERS (சலவைத் தொழிலாளி) | 600 QR |
| MASON (மேசன்) | 800 DHS |
| CARPENTER (தச்சுத் தொழிலாளி) | 800 DHS |
| PLUMBER / PIPE FITTERS / PIPE CUTTER (குழாய் பொருத்துபவர்) | 750 DHS |
| STEEL FIXER (இரும்பு பொருத்துபவர்) | 800 DHS |
| ELECTRICIAN (BULDING) (மின் இணைப்பாளர்) | 750 DHS |
| LAND SURVEYOR (நில அளவையாளர்) | 1500 - 2500 DHS |
| DIESEL MECHANIC (டீசல் மெக்கானிக்) | 1200 |
| WELDERS (வெல்டர்) | 900 - 1200 DHS |
| BULLDOZER / POCLAIN OPERATORS (புள்டோசர் இயக்குநர்) | 800 - 1200 DHS |
| DRIVER / TRAILER DRIVER (சாரதி) | 800+200/1000+All.w |
| A/C TECHNICIAN (A/C திருத்துபவர்) | |
| CLEAING SUPERVISOR | 1200 DHS |
| FABRICATOR STEEL / ALUMINIUM | 1100 DHS |
| MOULDERS (வார்ப்புத் தொழில்) | 800 DHS |
| AUTO ELECTRICIAN | 1200 DHS |
| AUTO MECHANIC | 1200 DHS |
| RIGGERS (ரிங்கர்) | 800 DHS |

- நேர்முகப் பரீட்சை (INTERVIEW) 01.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருப்பதால் அதற்குமுன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
- முன்னர் பதிவு செய்தவர்களும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.
- பாஸ்போர்ட் சான்றிதழ்கள் உள்ளவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு வரும்போது அவற்றை எடுத்து வரவும். 'பாஸ்போட்' இல்லாதவர்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம். தெரிவுசெய்யப்படுமிடத்து பாஸ்போட் எடுத்துத் தரவேண்டும்.
- பதிவுக்கட்டணம் 200/=

(7643)

உங்கள் தொடர்புகளுக்கு:
ACE INTERNATIONAL
இல.8, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். T.P. - 021-2405
ACX உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் பொதி சேவை.

★ சிங்கப்பூரில் மாதம் 30,000/= ரூபா சம்பளத்துடன் வேலைவாய்ப்பு ஒழுங்கும் செய்துதரப்படும்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்தம்பி தங்கம்மா

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்தம்பி தங்கம்மா அவர்கள் நேற்று (28.08.2002) புதன்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும் யோகநாதன் (குட்டி), தனலெட்சுமி (நீதிமன்றம், திருகோணமலை), யோகராஜா (பிரதி அதிபர், மெதடிஸ்த மகளிர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதா, ஈஸ்வரன், கனகேஸ்வரி (R.D.A., திருகோணமலை) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற பிரணவன் மற்றும் சிந்துகி, தர்ஷிவி, நிஷாகாந், ஜனனி, ஜனார்த்தனன், திவாகர், சங்கவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மகன்* - யோகநாதன் (குட்டி)
ஐசி தொலைத்தொடர்பு நிலையம்.

*இல.50, K.K.S. றோட்*
*கொக்குவில்.*
(7661)

## அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் அருள்பிரகாசம்

**(ஓய்வுபெற்ற லிகிதர் - விவசாயத் திணைக்களம்)**

நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் அருள்பிரகாசம் அவர்கள் நேற்று (28.08.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி ரூபி அருள்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.கன்னியர்மடம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் றூபினி (கனடா), அருளினி (கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), அன்ரனி பிறைசோ (கனடா), துசியந்தி (முன்னாள் ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தாஸ்கரன், ஜெகநாதன், சாமினி, ஜிட்டேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வரப்பிரகாசம், நற்கருணைப்பிரகாசம், பிளசம், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், பிரான்சிஸ் பிரகாசம், பேபி, பிரகாசராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு 183, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலிப் பூஜையின் பின்பு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*183, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(7661)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவம்

# மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று விசாரணை

யாழ்.நகரில் 2ஆம் குறுக்குத் தெருப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பொலீஸாரால் பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலக அதிகாரிகள் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சமர்ப்பித்த முறைப்பாட்டின் பேரில் இந்த விசாரணைகளை ஆணைக்குழு நடத்தியது. நேற்றைய சம்பவத்திற்கு காரணமாக இருந்த பொலீஸ் கான்ஸ்டபிளும், பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் பொதுமக்களும் தத்தமது வாக்குமூலங்களை ஆணைக்குழு அதிகாரிகளிடம் வழங்கினர்.

அதன்பின்னர் இருதரப்பினருடனும் யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைத்துக் கலந்துரையாடினர்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெற அனுமதிக்கக்கூடாது என்றும்-

இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றால் அது தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - ஆணைக்குழுவினர் சம்பந்தப்பட்ட பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள் குறிப்பிட்ட பெண்மீது நேரடியாகப் பலாத்காரச் செயல்கள் ஏதும் புரியாவிட்டாலும் முறைகேடாக நடக்க முற்பட்டமை ஏற்கக்கூடிய விடயம் அல்ல என்று மனிதஉரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3-4)

## பிரச்சினையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொண்டு பேச்சுக்கு வரமாட்டார்கள் என்பது அரசுக்குத் தெரிந்த விடயம். நிரந்தரமான தடை நீக்கமே இடம்பெறும் என்பதில் புலிகள் திட நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் தரப்பில் பேச்சுக்களில் எவரெவர் கலந்துகொள்வது என்பதை அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தலைமையில் புலிகள் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிபுணர் டாக்டர் ஜே.மகேஸ்வரன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் தாய்லாந்தில் செப்ரெம்பர் 16 முதல் 18வரை நடைபெறும் பேச்சுக்களில் கலந்துகொள்கிறார்கள்.

அரச குழு உறுப்பினர்களின் பெயர்களை அரசு இன்னும் வெளியிடவில்லை. என்றாலும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குழுவுக்குத் தலைமை தாங்குவார். அமைச்சர் மிலிந்த மொற கொட, சமாதானச் செயலகச் செயலாளர் நாயகம் பேர்னாட் குணதிலக ஆகியோர் குழுவில் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவது பேச்சு பூர்வாங்கப் பேச்சு; நிகழ்ச்சி நிரல் இல்லாமல் நடப்பது. வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அவசர வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றியே முதலாவது பேச்சு நடைபெறும் முக்கியமாக உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளவர்கள் தமது சொந்த ஊர்களுக்குச் சென்று மீள் குடியமர்தல், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்ற விடயங்கள் பற்றிப் பேசப்படும். இரண்டாவது சந்திப்பில் இடைக்கால நிர்வாகம் பற்றி ஆராயப்படும். (ம-12)

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டு பின்னர் கைகலப்பு இடம்பெறறது என்றும்

அதைத் தொடர்ந்து கத்திக்குத்து இடம்பெற்றதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நெஞ்சில் கத்திக்குத்துக்கு இலக்கான யசோதரனை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லவில்லை என்றும் -

காலதாமதமாக எடுத்துச் சென்றதால் இரத்தப்பெருக்கு ஏற்பட்டே மரணம் சம்பவித்தது என்றும் - விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மேலதிக நீதிவான் பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டார்

இந்தச் சம்பவம் தொடர்பாக மாணிக்கம் சிவகுமாரை பொலீஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3-10-15)

## நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகர் தலைமையில் கூடும்போது இந்தப் பிரேரணையை எப்போது நாடாளுமன்றத்தில் எடுப்பது, எத்தனை நாள்களுக்கு விவாதம் நடத்துவது என்பவை குறித்து முடிவு செய்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகப் பிறிதொரு தினத்தில் அமைச்சரவையைக் கூட்டி அரசமைப்புத் திருத்தத்தை அங்கீகரிப்பது என்று நேற்றைய கூட்டத்தில் ஒருமனதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி இன்று வரும் பட்சத்தில் அனேகமாக இன்றே அந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் சாத்தியம் உள்ளது.

இயன்ற விரைவில் இந்த அரசமைப்புத் திருத்தத்தை அமைச்சரவையில் அங்கீகரித்து அடுத்த மாதம் 10,11ஆம் திகதிகளில் நடாளுமன்றத்துக்கு அதனைச் சமர்ப்பிக்க அரசுத் தரப்பு முயன்று வருகின்றது.

# முன்னாள் அமைச்சர் பெயரில் ஊழல்

கொழும்பு,ஓக.29

முன்னைய அரசில் மிகமுக்கிய அமைச்சுப் பதவி ஒன்றை வகித்த சிரேஷ்ட அரசியல் பிரமுகர் ஒருவரினாலும் அவரது மனைவியினாலும் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பல வங்கிக் பெட்டகங்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் சோதனையிட்ட குற்றப்புலனாய்வுப் பொலீஸார் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய வைப்புச் சான்றிதழ்களைக் கைப்பற்றியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரிமினல் வழக்குகளில் சிக்கியுள்ள மேற்படி அரசியல் பிரமுகரின் வங்கிப்பெட்டகங்களைச் சோதனையிடுவதன் மூலம் சட்டச்சிக்கலுள்ள சில பொருள்களைக் கைப்பற்றலாம் என்ற எதிர்பார்ப்பில் அவற்றைச் சோதனையிடுவதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்றுத் தமது வங்கிப் பெட்டகங்கள் சோதனையிடப்படுவதாகத் தனது மனைவி மூலம் தகவல் பெற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட பிரமுகர், நாடாளுமன்றத்திலிருந்து வங்கிக்கு விரைந்துவந்து சோதனையிலீடுபட்டிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் தர்க்கம் புரிந்ததாகவும் -

இந்தத் தர்க்கம் காரணமாக இன்னும் மூன்று வங்கிப் பெட்டகங்களைச் சோதனையிடாத நிலையில் அவற்றை சீல்வைத்துவிட்டுச் சோதனைப் பணியை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று நிறுத்திக்கொண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ம)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும் அவர்கள் கோரியிருக்கின்றனர்.

கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பில் ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ இக்கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

சமாதான நடவடிக்கைகளுக்கு அனைத்து மக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் நாடு பயங்கரப் போருக்குள் மீண்டும் இழுத்துவிடப்படாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் திருச்சபை நம்புவதாகவும் ஆயர் மார்க்கஸ் பெர்னாண்டோ கூறியிருக்கிறார்.

செப்ரெம்பர் 6ஆம் திகதி புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவதென அரசாங்கம் தீர்மானித்திருப்பது தெரிந்ததே. (ம)

## கண்காணிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் பரஸ்பர ஒத்துழைப்பும் நிலவுவதற்கும் ஒத்துழைக்கவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவினர் கௌசல்யனைக் கேட்டுக்கொண்டனர்.

பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று கௌசல்யன் உறுதியளித்தார்.

இரு மாவட்டங்களிலும் இப்போது தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையேயான நல்லுறவு வெகுவாகப் பேணப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்று கண்காணிப்புக் குழுவின் அரச தரப்பு உறுப்பினர் அஸ்லஸ் கூறினார். அதற்குக் கௌசல்யன் நன்றி தெரிவித்தார். இரு மாவட்டங்களின் கண்காணிப்புக் குழுக்களுடைய தலைவர்களும் நன்றி தெரிவித்தனர். இன நல்லிணக்கத்தை மேலும் வளர்க்கும் நோக்கில் மட்டக்களப்பில் விரைவில் இராணுவத் தலைவர்கள், கண்காணிப்புக் குழுவினர், புலிகளின் பிரதிநிதிகள், விசேட அதிரடிப்படையினர், பொலீஸார் ஆகியோர் கூடிப் பேசுவதென்று சந்திப்பின்போது முடிவுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. (ம)

# ஜனாதிபதியின் நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரம் அனைவரும் அறிந்ததே. இப்படியான நிலையில்தான் இந்த இரகசியக் கூட்டம் நடைபெற்றுள்ளது. ஜனாதிபதியே இந்த நாட்டின் தலைவி. அவருடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது கடமை. எனவே, ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பாதகம் ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பு? ஜனாதிபதி இல்லாத நேரத்தில் அவருடைய அலுவலகத்தில் இரகசியக் கூட்டம் சபாநாயகரின் அனுமதியுடன் நடந்ததா? - என்று அமைச்சர் அஸ்வர் சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பொ.ஐ.முன்னணி உறுப்பினர் மங்கள சமரவீர விளக்கம் ஒன்றையளித்தார். "நான் சுதந்திரக் கட்சியின் பொருளாளராகவும் அதேவேளை நாடாளுமன்றக் குழுவின் கொறடாவாகவும் செயற்படுகின்றேன். அத்தோடு, நான் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இக்கூட்டம் ஜனாதிபதியின் அனுமதியுடனேயே அவரது அறையில் இடம் பெற்றது. கூட்டத்தில் இங்கு உள்ளவர்களைத் தவிர வேறு வெளிநபர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

"ஆனால், கடந்த வாரம் பிரதமர் நாட்டில் இல்லாதவேளை பிரதமரின் அலுவலகத்தில் இப்படியான கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் நாடாளுமன்றத்துடன் எந்தவிதத்திலும் தொடர்பு இல்லாத இராஜரட்ணம் என்ற புலிகளின் தீவிர ஆதரவாளர் ஒருவர் கலந்துகொண்டுள்ளார். இதற்கு மட்டும் விசேட அனுமதி பெறப்பட்டதா?" என்று வினவிய மங்கள சமரவீர, மற்றுமொரு பிரச்சினையைக் கிளப்பினார்.

இரு பக்கங்களினதும் வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட சபாநாயகர், "இந்த நாடாளுமன்றத்தின் நிர்வாகம், பாதுகாப்பு ஆகியவற்றின் பொறுப்பு என்னிடமே உள்ளது. இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் ஜனாதிபதியின் தனிப்பட்ட அறையில் கூட்டம் நடத்த என்னிடம் அனுமதி பெறப்படவில்லை. ஜனாதிபதி இல்லாதவேளை அவரது அலுவலகத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக எனக்குத் தெளிவில்லை. எனவே, இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து சபைக்கு அறிவிக்கிறேன் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

அப்போது ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச பேச எழுந்தார். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று நான் கூறிவிட்டேன். நீங்கள் மேலும் பேசவேண்டிய அவசியமில்லை என சபாநாயகர் கூறினார்.

அதற்கு "இல்லை ஐயா, ஜனாதிபதியின் அறையில் நடந்த இரகசியக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டதாக அமைச்சர் அஸ்வர் குறிப்பிட்டார். ஆனால், அக்கூட்டத்தில் கலந்துகொண்ட 6 ஐ.தே.க. உறுப்பினர்களின் பெயர்களை அவர் குறிப்பிடவில்லை. அவற்றையும் குறிப்பிட்டிருந்தால் அமைச்சரின் குற்றச்சாட்டு பூரணமானதாக அமையும்" என்று விமல் வீரவன்ச ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். (ம)

## காக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து அங்கிருந்த மண் மூடை ஒன்றை அடித்து விளையாடியதாகவும் -

இதனைக் கண்ட படையினர் மூவர் "மண்மூடைக்கு அடித்து எங்களைக் கேவலப்படுத்துகிறாயா? மண்மூடைக்கு அடிப்பது எங்களுக்கு அடிப்பது போன்று உள்ளது" - என்று கூறி அவரைத் தாக்கியதாகவும் -

பின்னர் அருகில் இருந்த காவலரண் ஒன்றுக்குள் சுமார் ஒன்றரை மணிநேரம் தடுத்து வைத்திருந்ததாகவும் - கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் இதுபற்றி முறையிடப்பட்டுள்ளது. (ம-12)

## தாய்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து அதியுயர்பீடமும் அரசியல் குழுவும் நீண்டநேரம் ஆராய்ந்திருக்கின்றன. வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

இருப்பினும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதற்கிடையில் அமைச்சர் ஹக்கீம் பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசவிருந்தார். (ம)


நாளை முதல் 3 நாள்களுக்கு

"எங்கெல்லாம் அடக்குமுறையின் நுகத்தடிகள் அழுத்தம் தருகின்றனவோ.... அங்கெல்லாம் ஸ்பார்ட்டக்கஸ் பிறப்பெடுக்கின்றான்"

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

பிரமாண்டமான படைப்பு

ஸ்பார்ட்டக்கஸ்

(புரட்சிவீரன் ஒருவனின் புயலான காவியம்)

நாடகம்

காலம்:

30.08.2002 வெள்ளி | 31.08.2002 சனி | 01.09.2002 ஞாயிறு

மன்ற அரங்கில்

தினமும் மாலை 6.45 மணிக்கு

- ஆசனப் பதிவுகளை யாழ். மன்ற அலுவலகத்தில் செய்துகொள்ளலாம்.
- ஒவ்வொரு நாளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்.

T.P. - 021-2393

website: www.cpateam.org (C/23325) E.mail: cpajaffna@eureka.lk



எமது நேற்றைய வீடியோ CD வெளியிடு

இவன்

வீடியோ விமல், யாழ்ப்பாணம். (C/23363)



BEACON

யாழ்.நகர்

A/L 2003/04

வணிகப்புள்ளிவிபரவியல்

ஆசிரியர்: த.தவசேகர்

நாள்:- சனி, ஞாயிறு

நேரம்:- 1.00 - 2.00

(7552) நடைபெறுகின்றது.



வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

G.A.Q. 1st in Com 2003/2004

யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | - க.தர்மராஜா | வரலாறு | - S.கமலநாதன் |
| அரசியல் | - T.ராஜன் | ஆங்கிலம் | - V.சிவநாதன் |
| இந்துநாகரிகம் | - க.சத்தியதாசன் | கணக்கியல் | - S.கந்தசாமி |
| பொருளியல் | - P.சண் | வணிகக் கல்வி | - S.கந்தசாமி |

மேற்படி பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 2002-08-31 (சனி) காலை 8.30 மணி.

இயக்குநர்

நியூட்டன் உயர் கல்வி நிறுவனம்

(7632) 342, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.



டயலொக் காண்ட்போன்

செப்ரெம்பர் மாத முற்பகுதியில் வழங்கப்படவிருக்கும் டயலொக் காண்ட் போனைப் பெறவிரும்புபவர்கள் (30-08-2002) வெள்ளிக்கிழமை பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:-

டயலொக் விற்பனை நிலையம் ஆலடிச்சந்தி, மானிப்பாய். | டயலொக் விற்பனை நிலையம் K.K.S. வீதி, சுன்னாகம்.

மேலதிக விவரங்களுக்கு:-

செல்வம் ஸ்ரோர்ஸ்,

330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(7660)

நவீன யுகத்தின் தகவல் பரிமாற்றத்தில் உங்கள் நண்பன்



யாழ் நகரில் புதிய உதயம்

ENGLISH ACADEMY

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(புகையிரதக் கடவை அருகில்)

தரம் 6 முதல் 13 வரையான வகுப்புகள்

ENGLISH CLASSES ONLY

BY: K.T.RAJAH

ஆரம்பம்: 04.09.2002

முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

விந்தியா தொலைத்தொடர்பு நிலையம்,

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. No: 021-2588. (7515)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.